# ஐரோப்பிய வரலாறு


தொகுப்பாளர்
முனைவர். **தி.சிவகாமசுந்தரி**
முனைவர். **இரா.காஞ்சனாதேவி,**
வரலாற்றுத் துறை,
பெரியார் கலைக் கல்லூரி,
கடலூர்.

# பொருளடக்கம்


1. இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பா
2. புதிய நாடுகள், கடல்வழிகள் கண்டுபிப்பு
3. மறுமலர்ச்சி
4. சமய சீர்திருத்த இயக்கம்
5. சமய சீர்திருத்த மறுப்பு இயக்கம்
6. ஐந்தாம் சார்லஸ்
7. இரண்டாம் பிலிப்
8. முப்பதாண்டுப் போர்
9. நான்காம் ஹென்றி
10. பதினான்காம் லூயி
11. கார்டினல் ரிச்சல்யு
12. கார்டினல் மாசரின்
13. மகா பீட்டர்
14. இரண்டாம் காதரீன்
15. பெருந்தேர்வாளர் பிரடரிக் வில்லியம்
16. மகாபிரடரிக்
17. மரியதரசா
18. இரண்டாம் ஜோசப்
19. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் ஐரோப்பியநிலை

# 1. இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பா

***ஐரோப்பிய வரலாற்றிலும் பண்டைக்காலம், இடைக்காலம், தற்காலம் என்னும் மூன்று பகுதிகள் உள்ளன***

ஐரோப்பிய வரலாற்றில் இடைக்காலம் என்பது கி.பி. 476-ல் மேற்கத்திய ரோமானியப் பேரரசின் வீழ்ச்சி ஏற்பட்டது முதல் ஏறக்குறையப் பத்து நூற்றாண்டுகள் நீடித்ததாக வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. 1453-ல் கான்ஸ்டாண்டிநோபிள் நகரம் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்ட நிகழ்ச்சியும், 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தீவிரமாக வளர்ச்சியுற்ற மறுமலர்ச்சி இயக்கமும் இடைக்காலம் முடிவுற்று நவீனகாலம் தொடங்கியதன் அறிகுறி என்றும் சொல்லலாம். நவீன காலத்தின் தொடக்கத்தை அறிவிக்கும் 'மறுமலர்ச்சி' (Renaissance) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நடந்த ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அன்று.

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றின் சிறப்பியல்புகளில் ஒன்று மத்திய, மேற்கு ஐரோப்பா முழுவதும் ஒரு தனி உலகமாக இயங்கியது. ஐரோப்பா முழுவதற்கும் ஒரே திருச்சபை, ஒரே பேரரசு (A Universal Church and a Universal Empire) என்ற கோட்பாடு நிலவியது. பேரரசரும், போப்பாண்டவரும் ஐரோப்பிய உலகத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டு இணைந்து செயல்பட்டனர் (Dual Leadership of the Pope and the Emperor). ஐரோப்பிய மக்கள் யாவரும் கிறிஸ்துவர்கள் ஆகையால், சமயத்தைப் பொறுத்தவரையில் போப்பாண்டவரைத் தங்கள் தலைவராகவும், ஏனைய உலகியல் விஷயங்களில் பேரரசரைத் தலைவராகவும் ஏற்றுக்கொண்டனர். மக்களின் எண்ணங்கள், செயல்கள் யாவும் திருச்சபையின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன.

திருச்சபையின் செல்வாக்கு ஓங்கியிருந்த காலம் இடைக்காலம். இடைக்கால ஐரோப்பாவில் பல சிற்றரசுகள் அமைந்து, அவற்றுக்கிடையில் பூசல்களும் குழப்பங்களும் நிகழ்ந்துவந்தபோதும், போப்பாண்டவர்—பேரரசர் இவர்களின் இணைந்த தலைமையில் இயங்கிவரும் ஒரே கிறிஸ்துவ உலகம்தான் ஐரோப்பா என்ற கருத்து மேலோங்கியிருந்தது. ஐரோப்பாவின் ஒரே மொழியாக இலத்தீன் (Latin) விளங்கியது. இந்நிலையில் ஐரோப்பாவில் வாழ்ந்த பல இன மக்களிடையே தேசிய உணர்ச்சி தோன்றுவதற்குச் சாதகமான சூழ்நிலை அமையவில்லை. மக்களிடையே தாங்கள் கிறிஸ்துவர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையுணர்வும், போப், பேரரசர் இவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட மக்கள் என்ற உணர்வும் இருந்ததேயன்றி, தாங்கள் குறிப்பிட்ட ஒரு நாட்டு மக்கள், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையுணர்வு ஏற்படவில்லை. இதைத்தான் நாம் 'தேசியம்' என்று கூறுகின்றோம். இந்தத் தேசிய உணர்ச்சியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நாம் இடைக்காலத்தின் இறுதியில் காணலாம். தேசிய நாடுகள் பல உருவானதையும் காணலாம். தேசிய நாடுகளின் தோற்றம்தான் நவீனகாலத் தொடக்கத்தின் அறிகுறியாகும்.

இடைக்கால ஐரோப்பாவில் நாம் காணும் மற்றோர் அமைப்பு நிலமானிய முறை (Feudalism). ஐரோப்பாவின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கை இந்த நிலமானிய முறையின் அடிப்படையில்தான் அமைந்திருந்தது. ரோமானியப் பேரரசை அழித்த மக்கள் கூட்டத்தினர் அழிவு வேலைகளைச் செய்தார்களேயன்றி, ஆக்கவேலை செய்வதற்கான ஆற்றல் அவர்களிடம் இல்லை. அழிந்துபட்ட ரோமானிய நிர்வாக முறைக்கு ஈடாக அவர்களால் ஓர் அமைப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. மத்திய, மேற்கு ஐரோப்பா முழுவதும் நிலையான அரசு, நேர்மையான நிர்வாகம், ஒழுங்கு, சட்டம், அமைதி இவை யாவும் அழிந்து, ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டது. இக் குழப்ப நிலையிலிருந்து ஐரோப்பாவைக் காப்பாற்றி ஓரளவுக்கு அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குக் காரணமாக இருந்தது நிலமானிய முறை அமைப்பு. தங்களைக் காப்பாற்றிக்கொள்ளமுடியாத வலிமையற்ற குடிமக்கள், வலிமை வாய்ந்த, செல்வம் மிக்க நிலப்பிரபுக்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் உதவியை நாடி அவர்களிடம் சரணடைந்தனர். நிலப்பிரபுக்கள் தங்களுடைய நிலங்களை இவர்களுக்குப் பிரித்தளித்தனர். இவர்கள் மானியதார்கள் (Tenants) என்று அழைக்கப்பட்டனர். மானியதார்கள் நிலத்தைப் பயிரிடுவதுமட்டுமின்றிப் பிரபுக்களுக்கு ஆபத்து வரும்பொழுது தங்களுடைய படைகளுடன் சென்று அவர்களுக்கு உதவவேண்டும். எனவே, இது 'படைமானிய' முறை என்றும் வழங்கப்பட்டது. நாளடைவில் நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கமும், செல்வாக்கும் அரசர்களின் அதிகாரத்திற்கே ஊறு விளைவிக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டன. வலிமையற்ற மன்னர்களின்மீதே போர் தொடுக்கும் அளவிற்கு இவர்கள் துணிவு பெற்றனர். இவ்வாறு இடைக்காலத்தில் சிறுகச் சிறுக நிலப்பிரபுக்களின் அதிகாரம் ஓங்கி, மன்னர்களின் அதிகாரம் குறைந்தது. ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் மத்திய அரசு வலிமையின்றிச் செயலற்று விளங்கியது. பிரபுக்களின் ஆதிக்கம் மேலோங்கிநின்றது. ஆனால், இடைக்காலத்தின் இறுதியில் நிலமானிய முறை வீழ்ச்சியுற்று மன்னர்களின் அதிகாரம் வளரத் தொடங்கியது. தேசிய அரசுகள் (Nation States) தோன்றின. இதுவே ஐரோப்பிய வரலாற்றில் நவீன காலத்தின் தொடக்கம்.

இடைக்காலத்தின் இறுதியில் நகரங்கள் தோன்றி (Rise of Medieval Cities) ஐரோப்பாவின் அரசியல் பொருளாதார வாழ்க்கையில் மிக்க செல்வாக்குப் பெறுவதைக் காண்கிறோம். நிலமானிய முறை அமைப்பையும், திருச்சபையின் ஆதிக்கத்தையும் இந்நகரங்களின் வளர்ச்சி மிகவும் பாதித்தது. வியாபாரம், தொழில் இவற்றின் வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய நகரங்கள், விவசாயத்தையும், நிலத்தையுமே செல்வமாகப் பெற்றிருந்த பிரபுக்களின் ஆதிக்கத்தை எதிர்த்துச் செயல்படலாயின. ஐரோப்பாவில் விவசாயத்தின் அடிப்படையில் அமைந்திருந்த பொருளாதாரம் மாறி, தொழில், வியாபாரம் இவற்றின் அடிப்படையில் அமைந்த புதிய பொருளாதாரம் தோன்றியது. நிலப்பிரபுக்களைவிட அதிகச் செல்வமும், படைபலமும், மேலான பண்பாடும் பெற்றிருந்த நகர மக்களுக்கும் நிலப்பிரபுக்களுக்குமிடையே போட்டி ஏற்பட்டது. இறுதியில் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் அழிந்தது. நகரங்களின் தோற்றத்தினால் இதர பல நல்ல விளைவுகள் ஏற்பட்டன. அரசியல்துறையில் இவற்றின் தோற்றம் சுய ஆட்சிக் கொள்கை வளருவதற்கு உதவியது. வலிமைமிக்க மத்திய அரசு ஏற்பட்டு, வலிமையுள்ள முடியாட்சி தோன்றுவதற்கு நகர மக்கள் காரணமாக இருந்தனர்.

# 2. புதிய நாடுகள், கடல் வழிகள் கண்டுபிடிப்பு

நவீனகால ஐரோப்பாவின் உதயத்தை நமக்கு அறிவித்த நிகழ்ச்சிகளில் 'புதிய நாடுகள் மற்றும் கடல் வழிகள் கண்டுபிடிப்பும்' ஒன்று ஆகும். மறுமலர்ச்சி உணர்வால் உந்தப்பட்டிருந்த ஐரோப்பிய மக்கள் பல துறைகளிலும் புரட்சிகரமான மாறுதல்களுக்குக் காரணமாக இருந்தார்கள். அவர்களிடம் புதிதாகக் காணப்பட்ட துணிச்சல், விழிப்புணர்ச்சி ஆகியவை துணிகரச் செயல்களில் ஈடுபடத் தூண்டின. இவை தவிர புதிய கடல்வழிகள், புதியநாடுகள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தேவையும் ஏற்படவே, பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய வரலாற்றில் மட்டுமல்லாது உலக வாலாற்றிலேயே புதிய அத்தியாயம் ஆரம்பித்தது. எண்ணற்ற கடல் வழிகளும், புதிய நாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அவை மனித வரலாற்றில் மாபெரும் மாற்றங்களையும் பன்னாட்டுறவில் புதிய கோட்பாடுகளையும் உருவாக்கியது.

## புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கான காரணங்கள் :

### 1. கான்ஸ்டாண்டி நோபிளின் வீழ்ச்சி (1453) :

கி.பி. 1453-ல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதன் விளைவாக கிழக்கு ரோமானியப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. மேலும் ஐரோப்பியூர்கள் இதுவரை கான்ஸ்டாண்டிநோபிள் வழியாக கீழை நாடுகளுடன் அவர்கள் செய்து வந்த வாணிபத்தை துருக்கியர் துண்டித்தனர். எதிப்பு வழியாக நடந்து வந்த கடல் வாணிபத்தையும் தடுத்து விட்டனர். இவ்வாறு கருங்கடல் மார்க்கம், செங்கடல் மார்க்கம், பாரசீக வளைகுடா மார்க்கம் ஆகியவை அடைக்கப்பட்டு விட்டதால் புதிய கடல் வழியை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டது. ஆம், Necessity is the mother of invention. இதுவே புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட முக்கியக் காரணமாக அமைந்தது.

### 2. மறுமலர்ச்சி (Renaissance) :

உலகத்தையும், வாழ்க்கையையும் புதிய நோக்குடன் அறியும் மறுமலர்ச்சி உணர்வு ஐரோப்பிய மக்களிடம் தோன்றியது. பல பயணக்குறிப்புகளைப் படித்த அவர்கள் மனதில் புதிய நாடுகளைக் காணும் ஆர்வம் ஏற்பட்டது. அதற்காக துணிகரச் செயல்களில் ஈடுபடவும் தயாரானார்கள். எனவே மறுமலர்ச்சியின் விளைவாக மக்களிடம் காணப்பட்ட விழிப்புணர்ச்சி புதிய கடல்வழிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

### 3. மாலுமிகளின் திசைகாட்டும் கருவி (Mariner's Campass):

பூமி உருண்டை வடிவம் என விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். எனவே உலகத்தை சுற்றிவர முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அப்போது தான் 'மூர்'களினால் மாலுமிகளின் திசைகாட்டும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இது கடற்பயணம் செய்பவர்களுக்கு மிகுந்த உதவியாக இருந்தது. அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. எனவே திசைகாட்டும் கருவி, நீண்டதூரக் கடற்பயணங்கள் மேற்கொள்ள உதவி செய்தது. அறிந்திராத கடல்கள் மீது பயணம் செய்யவும், புதிய கடல்வழிகள் கண்டுபிடிக்கவும் உற்ற துணையாக விளங்கியது திசைகாட்டும் கருவி.

### 4. சிலுவைப் போர்கள் (The Crusades) :

இடைக்காலத்தில் நடந்த சிலுவைப் போர்கள், ஆசியாவைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை ஐரோப்பிய மக்களிடையே

தூண்டிவிட்டன. மேலும் இந்த சிலுவைப் போர்களின் விளைவாக ஆசியாவுக்கும், ஐரோப்பாவுக்குமிடையே வியாபாரத் தொடர்பு ஏற்பட்டது. ஆசியப் போர்க்களங்களிலிருந்து திரும்பிய ஆயிரக்கணக்கான ஐரோப்பியர் பட்டு, முத்து, தந்தம், வாசனைத் திரவியங்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களை எடுத்து வந்தனர். இந்தப் பொருட்களுக்கு ஐரோப்பாவில் கிராக்கி ஏற்படவே இத்தாலிய நகரங்களான வெனிஸ், ஜெனோவா, மிலான், பிளாரன்ஸ் ஆகிய நகரங்கள் இந்த பொருட்களை ஐரோப்பியச் சந்தைகளில் விற்று இலாபம் ஈட்டின. இதைக் கண்ட போர்ச்சுக்கீஸியர்களும், ஸ்பானியர்களும் கடல் வாணிபம் செய்ய ஆவல் கொண்டனர். இதுவும் கடல் வழிகள் கண்டுபிடிக்கப் படக் காரணமாயின.

## 5.மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகள்(Marco polo):

வெனிஸ் நகரத்தைச் சேர்ந்த மார்க்கோபோலோ என்பவர், மங்கோலிய அரசன் குப்ளாய்கான் (Kublaikhan) என்பவரின் ஆதரவுடன் சீனா, ஜப்பான், இந்தியா போன்ற ஆசிய நாடுகளுக்கு சென்று பல பகுதிகளை நேரில் பார்த்தார். சுமார் பதினேழு ஆண்டுகள் வெளிநாடுகளில் தங்கியிருந்த மார்க்கோ போலா, 1295-ல் தாய்நாடு திரும்பிய பின் தன்னுடைய பயணக் குறிப்புகளை "The travels of Marcopolo' என்ற பயணக் குறிப்பு நூலாக வெளியிட்டார். இதனைப் படித்த மக்களின் கற்பனை சிறகடித்து பறந்தது. இந்தியா போன்ற நாடுகளைப் பற்றி மேலும் அறிய வேண்டும், கிழக்கிந்திய நாடுகளின் செல்வத்தைப் பெறவேண்டும் என்ற ஆவல் ஐரோப்பிய மக்களிடம் ஏற்பட்டது.

## 6. போர்ச்சுக்கல் இளவரசர் ஹென்றியின் ஆதரவு :
**(Prince Henry, 1394 - 1460) :**

புதிய கடல் வழிகளையும், நாடுகளையும் கண்டுபிடிப்பதில் புதிய வேகத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியவர் போர்ச்சுக்கல் மன்னர் ஹென்றி ஆவார். இவர் மக்களின் வீர தீர உணர்ச்சிக்கு பேராதரவு அளித்தார். ஆப்பிரிக்கா கண்டத்தைச் சுற்றி இந்தியாவை அடைய நேரடி கடல் வழி கண்டுபிடிக்க வேண்டும் என்பதே இவரது குறிக்கோள். இளவரசர் ஹென்றி உண்மையில் ஒரு மாலுமி அல்ல. ஆனால் இவர் அப்போது நிலவிய பூகோளவியல் கொள்கைகளை பரிசோதனை செய்து பார்க்க நினைத்தார். அத்துடன் கிறிஸ்துவ சமயத்தை பரப்பலாம் என்றும் தனது நாட்டிற்கு சில நிலப்பகுதிகளையும், செல்வவளங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்பினார். அதற்காக இவர் 'மாலுமிகளின் பயிற்சி பள்ளி' ஒன்றை ஆரம்பித்தார். கப்பல் வடிவமைப்பாளர்களை அழைத்து நீண்டதூரம் செல்லக் கூடிய புதிய கப்பல்கள் கட்டுவதற்கு வடிவமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி Caravals என்ற புதிய பயணக் கப்பல்கள் செய்யப்பட்டன. இவரது முயற்சியின் காரணமாக போர்ச்சுக் கல்லிலிருந்து சுமார் 800 மைல் தொலைவிலுள்ள

அசோர்ஸ், மெடிரா (Azores, Madeira) போன்ற தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1445-ல் காம்பியா, செனகல் நதிமுகத் துவாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு கடற்பயணத்திற்கு அதிக ஆர்வமுடன் ஆதரவளித்து வந்ததால் இவருக்கு 'மாலுமி ஹென்றி' (Henry, the Navigator) என்ற பெயர் ஏற்பட்டது. இளவரசர் ஹென்றியின் முயற்சியும் ஆதரவும் புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட வழிவகுத்தது.

## 7. விஞ்ஞான அறிவு :

விஞ்ஞானிகள் பலர் தோன்றி பல உண்மைகளை வெளியிட்டனர். உலகம் உருண்டையாக இருப்பதால் மேற்கு நோக்கிப் பயணம் செய்தால் இந்தியா, சீனா ஆகிய நாடுகளை அடையலாம் என்றும் ஆப்பிரிக்காவின் மேற்கு கடற்கரை வழியாக சென்றும் இந்தியாவை அடையலாம் என்றும் மக்கள் எண்ணினர். விஞ்ஞானிகள் வெளியிட்ட உண்மைகளை ஆராய மக்கள் ஆர்வம் கொண்டு புதிய இடங்களுக்குச் செல்ல முற்பட்டனர்.

## புதிய கடல்வழிக் கண்டுபிடிப்புகள்

## 1.பர்த்தலோமியோ டயஸ் (Barthalomew Diaz) :

புதிய நாடுகளைகடல் வழிகளையும் கண்டுபிடிப்பதில் போர்ச்சுக்கீஸியர்கள் முன்னணியில் இருந்தார்கள். 1488-ல் பார்த்தலோமியோ டயஸ் என்ற போர்ச்சுக்கீஸியர் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையை அடைந்தார். அங்கு புயல் காற்று வீசவே அதற்கு புயல்முனை என்று பெயர் சூட்டிவிட்டு திரும்பினார். இது பற்றி மன்னர் இரண்டாம் ஜான் என்பவரிடம் கூறிய போது அவர் இம்முனைக்கு 'நன்னம்பிக்கை முனை' என்று பெயர் சூட்டினார். ஏனெனில் கடல் வழியாக இந்தியா போன்ற கீழை நாடுகளை அடைய முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது பார்த்தலோமியோ டயசின் பயணம்

## 2. வாஸ்கோடகாமா (Vasco-da-Gama) :

பார்த்தலோமியா டயசைப் பின்பற்றி 1497, ஜூலையில் வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுக்கீசியர் லிஸ்பன் துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் கடல்வழியைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டார் அவர் ஆப்பிரிக்காவின் மேற்கு கரையோரமாகச் சென்று நன்னம்பிக்கை முனையை அடைந்தார். பின்னர் ஆப்பிரிக்காவின் கிழக்கு கரையோரமாகச் சென்று மாலிண்டி (Malindi) என்ற இடத்தை அடைந்தார். பின்பு இந்து மகா சமுத்திரத்தின் வழியாக 1498, மே 27-ல் இந்தியாவின் மேற்குகரை ஓரத்திலுள்ள கள்ளிக்கோட்டை என்ற துறைமுகத்தை அடைந்தார். இந்த நிகழ்ச்சியானது நாகரிக உலகத்தில் பல பின் விளைவுகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவிலிருந்து தூரகிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல்வழியைக் கண்டுபிடித்ததின் நினைவாக,

கள்ளிக்கோட்டையில் பளிங்குக் கல்லாலான ஒரு நினைவுத் தூணை எழுப்பினார். இந்தப் புதிய கடல் வழியினால் போர்ச்சுக்கீஸியர் பல குடியேற்றப் பகுதிகளை அமைத்து வாணிபத்தை விருத்தி செய்தனர்.

1500, மார்ச் 9-ம் தேதி கேப்ரால் (Cabrol) என்பவர் பதிமூன்று கப்பல்களுடன் லிஸ்பனிலிருந்து புறப்பட்டார். ஆனால் அவரது கப்பல்கள் புயலால் அடித்துச் செல்லப்பட்டு, பிரேசில் என்ற இடத்தை அடைந்தன. பின்னர் அதிக நாட்கள் கழித்து இந்தியா வந்து சேர்ந்தன.

இவ்வாறு போர்ச்சுக்கல் கடல்வழிகள் கண்டுபிடிக்கப்படுவதிலும்,புதிய நாடுகள் கண்டுபிடிப்பதிலும் முன்னோடி நாடாகத் திகழ்ந்தது.

## 3. கிறிஸ்டோபர் கொலம்பஸ்

**(Christopher Columbus) (1440-1506) :**

இத்தாலியிலுள்ள ஜெனோவா நகரத்தின் வணிகர் ஒருவரின் மகன்தான் கிறிஸ்டோபர் கொலம்பஸ். இவர் இளமையிலேயே தனது தந்தையுடன் பல நாடுகளுக்கும் கப்பலில் சென்றார். இவர் 'உலகம் உருண்டை வடிவானதால் அட்லாண்டிக் கடல் வழியே மேற்கு நோக்கிப் பயணம் செய்தால் இந்தியா போன்ற கீழை நாடுகளை அடைய முடியும் என்று நம்பினார். தனது திட்டத்தை போர்ச்சுக்கீஸிய அரசு ஆதரிக்காமல் போகவே, ஸ்பானிய அரசை நாடினார். ஸ்பானிய அரசர் பெர்டினாண்டும், அரசி இசபெல்லாவும், கொலம்பசின் திட்டத்திற்கு ஆதரவளித்து எல்லா உதவியும் செய்தனர்.

1492, ஆகஸ்ட் 3-ம் தேதி வெள்ளிக்கிழமை பாலோஸ் (Palos) என்ற ஸ்பானிய துறைமுகத்திலிருந்து Santa Maria, Nina, Minta என்ற பெயருடைய மூன்று கப்பல்களுடனும் என்பத்தி எட்டு ஆட்களுடனும் புறப்பட்டார் கொலம்பஸ். பல வாரங்கள் பயணத்திற்குப் பிறகு 1492, அக்டோபர் 12-ல் ஒரு நிலப்பகுதியை அடைந்தார். இந்தியாவையே அடைந்து விட்டதாகக் கருதினார். உண்மையில் அவர் அடைந்தது தற்போதைய மத்திய அமெரிக்க பகுதியிலிருந்த 'பகாமாஸ்' (Bahamas) ஆகும். பின்னர் கியுபா, ஹெயிட்டி ஆகிய தீவுகளை அடைந்தார். தான் கண்டுபிடித்த இடங்கள் இந்தியாவுக்கு அருகிலிருந்த தீவுகள் என்றே கருதினார். அங்குள்ள மக்களை செவ்விந்தியர் என்றே அழைத்தார். எனவேதான் இவை மேற்கிந்தியத் தீவுகள் என்று இன்றும் அழைக்கப்படுகின்றன. 1493, மார்ச் 15-ல் கொலம்பஸ் ஸ்பெயின் திரும்பினார்.

அதன் பின்னர் கொலம்பஸ் மேலும் மூன்று கடற்பயணங்களை மேற்கொண்டார் 1493-ல் 'ஜமைக்கா' தீவையும், 1498-ல் தென் அமெரிக்கப் பகுதியான வெனிசூலாவையும், 1502-ல் ஹோண்டுரஸ் பகுதியையும் கண்டுபிடித்தார். இவ்வாறு கொலம்பஸ் கண்டுபிடித்தது ஆசியாவோ, இந்தியாவோ அல்ல. அது ஒரு 'புதிய உலகம்' ஆகும். எனவே தான் 'புதிய உலகைக் கண்டுபிடித்தவர்' என்று கொலம்பஸ் புகழப்படுகிறார்.

கொலம்பசின் இப்பயணத்தைத் தொடர்ந்து மேலும் பல கடற்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. வடமேற்குத்திசையில் சென்றால் இந்தியாவை அடைய முடியும் என்ற எண்ணத்துடன் ஜான்கபாட் (John Cabot) என்பவர் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டார். இவர் இங்கிலாந்து அரசர் ஏழாம் ஹென்றியின் ஆணைப்படி கடற்பயணங்கள் மேற்கொண்டு புதிய நாடுகள் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டார். 1497-ல் வடமேற்காகப் புறப்பட்டு அட்லாண்டிக் கடலைக் கடந்து பாறைகள் நிறைந்து பனி மூடிக்கிடந்த ஒரு பெருந்தீவை அடைந்தார். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அந்த தீவிற்கு நீயுபவுண்ட்லாந்து (Newfoundland என்று பெயர். மேலும் அதற்கு அருகிலுள்ள Cape Breton என்ற தீவையும் கண்டுபிடித்தார். இதிலிருந்துதான் ஆங்கிலேயர் அமெரிக்கா மீது உரிமை கொண்டாட ஆரம்பித்தனர்.

கொலம்பஸ் கண்டுபிடித்த புதிய உலகத்திற்கு 1501-ல் பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த அமெரிக்கோ வெஸ்புகி (Americo Vespucci) என்பவர், ஸ்பானிய மன்னரின் ஆதரவுடன் சென்று பிரேசில் கடற்கரையில் ஆராய்ந்தார். தன்னுடைய கடற்பயணங்கள் பற்றி 1503-ல் தான் வெளியிட்ட நூலில் விவரித்துள்ளார். 1507-ம் ஆண்டு ஒரு ஜெர்மானிய உலகப்பட வரைவாளர் (Cartographer) தான் வரைந்த உலகப்படத்தில் புதிய உலகத்தை அமெரிக்கோ வெஸ்புகியின் நினைவாக 'அமெரிக்கா' என்று குறிப்பிட்டார். அதுமுதல் கொலம்பஸால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உலகம் அமெரிக்கா என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

## 4. பெர்டினாண்டு மெகல்லன்:

**(Ferdinand Magellan) 1480-1521 :**

இவர் ஒரு போர்ச்சுகீஸிய மாலுமி ஆவார் புதிய கடல்வழி காணும் பணியில் மெகலனின் சேவை மகத்தானது. இவர் ஸ்பானிய அரசர் ஐந்தாம் சார்லசின் ஆதரவுடன் 1519 செப்டம்பர் மாதம் ஐந்து பாய்மரக் கப்பல்களுடனும், 267 மாலுமிகளுடனும் செவில் (Seville) என்ற இடத்திலிருந்து மேற்கு நோக்கி தனது பயணத்தைத் தொடங்கினார். அட்லாண்டிக் கடலைக் கடந்து தென் அமெரிக்காவைக் கடந்து அதன் தென்முனையை அடைந்தார். அங்கிருந்த ஜலசந்தி இவரது நினைவாக மெகலன் ஜலசந்தி (Megellan Strait) என்று அழைக்கப்படுகிறது. பின்னர் ஒரு அமைதியான கடலினுள் நுழைந்தார். அக்கடல் கொந்தளிப்பின்றி அமைதியாக இருந்ததால் 'அமைதிப் பெருங்கடல்' (Pacific Ocean) என்று பெயரிட்டார்.

பசிபிக்கடலைக் கடந்த மெகலன் 1521-ல் ஒரு தீவுக் கூட்டத்தைக் கண்டுபிடித்தார். மன்னர் ஐந்தாம் சார்லசுக்கு தனது நன்றியைத் தெரிவிக்கும் படியாக, அந்த தீவுக் கூட்டங்களுக்கு, அவரது மகன் இரண்டாம் பிலிப்பின்

பெயரால் 'பிலிப்பைன்ஸ்' என்று பெயரிட்டார். மெகலன் தன் மாலுமிகளுடன் அந்த் தீவில் சிறிதுகாலம் தங்க எண்ணினார். ஆனால் அந்தத் தீவினருடன் ஏற்பட்ட சண்டையில் 1521 ஏப்ரல் மாதம் மெகலன் கொல்லப்பட்டார். எஞ்சிய மாலுமிகள் எல்கனோ என்பவர் தலைமையில் விக்டோரியா என்ற கப்பலில் ஸ்பெயினுக்குத் திரும்பினர். இந்தப் பயணம் நிறைவேற மூன்று ஆண்டுகள் ஆனது. இவ்வாறு முதன் முதலாக வெறும் பாய்மரக் கப்பல்களில் காற்றை நம்பி உலகத்தைச் சுற்றி வந்தவர்கள் இந்த மாலுமிகளே! இந்த சாதனையை நேரில் காண மெகலன் உயிருடன் இல்லையென்றாலும் 'உலகத்தைச் சுற்றி வந்த முதல் மாலுமி மெகலன்' என்று கூறுவது சாலப் பொருந்தும். மெகலனின் வெற்றி மிகப் பெரிய வெற்றியாகும்!

## 5. ஹெர்னாண்டோ கார்டஸ் (Hernando Cortez) :

புதிய உலகில் ஸ்பானியர்கள் முதன்முதலாக ஹிஸ்பானியாலோ (Hisponiola) என்ற தீவில் குடியேறினார்கள். பின்னர் படிப்படியாக கரிபியன் தீவுகளையும், தென் அமெரிக்காவையும் கைப்பற்றினார்கள். இந்தப் பகுதிகளின் ஸ்பானியக் கவர்னராக இருந்தவர் வெலாஸ்குவஸ் (velasquez) என்பவராவர். இவர் பக்கத்திலிருந்த மெக்ஸிகோவைக் கைப்பற்ற நினைத்தார். காரணம் மெக்ஸிகோவில் வாழ்ந்துவந்த அஸ்டெக்குகள் (Aztecs) என்ற இனமக்களிடம் தங்கமும் வெள்ளியும் குவிந்து கிடந்தன. எனவே1519-ல் கவர்னர் ஹெர்னாண்டோ கார்டஸ் என்ற படைத்தலைவரை அங்கு அனுப்பினார். கார்டஸ் எழுநூறு போர் வீரர்கள் மற்றும் பீரங்கிகளுடன் சென்று அஸ்டெக்குகளின் பேரரசரைச் சிறைபிடித்தார். எண்ணற்ற அஸ்டெக்குகளை கொன்று குவித்து 1521-ல் மெக்ஸிகோ நாட்டைக் கைப்பற்றினார். பின்னர் 'பெரு'நாடு ("Peru') கைப்பற்றப்பட்டது. புளோரிடாவிலிருந்து மெகலன் ஜலசந்தி வரை (பிரேசில் நீங்கலாக)உள்ள பகுதிகளில் ஸ்பானிய ஆதிக்கம் பரவியது.

## 6.ஜேரக்கஸ் கார்ட்டியர்: (Jacques Cartier)

**பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்ச்சுகீசியர்கள் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு அனுபவித்தார்கள். ஸ்பானியர்களோ கரிபியத்தீவுகளையும், புளோரிடா, மெக்சிகோ, தென்அமெரிக்காவின் அதிகமான பகுதிகளிலும் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். இதனால் பிரஞ்சுக்காரர்களும் விரைவில் இந்த குடியேற்றம் அமைப்பதில் பங்குபெற ஆரம்பித்தனர்.**

**1524-ல் பிரெஞ்சு அரசர் முதலாம் பிரான்சிஸ் ஜான்வெராசனோ (John Verrazano) என்ற இத்தாலிய மாலுமியை கடற்பயணம் மேற்கொள்ள உதவிசெய்தார். இவர் நோவாஸ் கோஷியா, நியூ இங்கிலாந்து கடற்கரைப் பகுதிகளையும், நியுயார்க துறைமுகத்தையும் கண்டறிந்து வந்தார். பத்து**

ஆண்டுகளுக்குப் பிறகு முதலாம் பிரான்சிஸ் தனது நாட்டைச் சேர்ந்த ஜேக்கஸ் கார்ட்டியர் என்பவரைஎவராசனோவின் பணிகளை தொடர அனுப்பினார். அமெரிக்காவின் வடக்கு கரை வழியாக ஆசியாவுக்கு வடமேற்கு வழி (North west pass ave) கண்டுபிடிக்க அனுப்பினார். ஆனால் கார்ட்டியர் இந்த வழி எதையும் கண்டுபிடிக்கவில்லை, ஆனால் மான்ட்ரிலுக்கு சிறிது தொலைவில் செயின்ட் லாரன்ஸ் நதியை கண்டுபிடித்துவிட்டு வந்து சேர்ந்தார். இவ்வாறு நாடு புதிய நாடுகள் கடல்வழிகள் கண்டுபிடிப்பில் இறங்கியது.

## 7. ஆஸ்திரியா : Austria

டாரஸ் (Torres) என்பவர் 1606-ல் ஆஸ்திரேலியாவையும் பேப்புவாவையும் பிரிக்கும் டாரஸ் ஜலசந்தி வழியாக கப்பலோட்டிச் சென்றார். பின்னர் பல டச்சு மாலுமிகள் ஆஸ்திரேலியாவின் வடக்கு, மேற்கு கரைகளில் இறங்கி பார்த்துவிட்டுச் சென்றனர். நியுஹலந்து என்று அது அவர்களால் அழைக்கப்பட்டது. 1642-ல் ஏபல் டாஸ்மன் (Abel Tasman) என்ற டச்சு மாலுமியால் கண்டுபிடிக்கப்பட்டதுதான் இன்றைய டாஸ்மேனியா என்ற தீவு ஆகும். அவரால் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு தீவு நியுசிலாந்து (Newzealand) ஆகும். ஆனால் டச்சுக்காரர்கள் இதற்கு மேல் இப்பகுதிகளில் தங்கள் முயற்சிகளைத் தொடரவில்லை. ஆனால் ஆங்கிலேயர்கள் வெற்றியடைந்தனர். 1688, 1699-ல் வில்லியம் டாம்பியர் என்ற ஆங்கிலேயர் ஆஸ்திரேலியாவின் வடமேற்கு பகுதியில் இறங்கிப் பார்த்து விட்டுச் சென்றார். மேலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் வான இயல் ஆராய்ச்சிக்கென பசிபிக்கடலில் டாஹிட்டி தீவுகளுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த கேப்டன் ஜேம்ஸ்கூக் (James Cook) 1770-ல் ஆஸ்திரேலியாவின் தென் கிழக்கு கரையில் இறங்கி (Botany Bay)அதன் இயற்கை எழிலில் மனதை பறிகொடுத்து சென்றார். அதுமுதல் ஆஸ்திரேலியா இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்குள் வந்தது.

இவ்வாறு பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் பல புதிய நாடுகளும் கடல்வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

## கடல்வழி கண்டுபிடிப்புகளின் விளைவுகள் : Results

1. உலகம் முழுவதிலும் ஐரோப்பிய நாடுசளின் ஆதிக்கம் பரவுவதற்கு இந்தக் கண்டுபிடிப்புகள் வழிவகுத்தன. குடியேற்றங்கள் அமைப்பதில் ஐரோப்பிய நாடுகள் முனைந்து நின்றன. சிறிய நாடான போர்ச்சுக்கல் தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில், இந்தியாவில் கோவா, ஆப்பிரிக்கா, சீனா ஆகிய நாடுகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. ஸ்பெயின் வடஅமெரிக்காவிலுள்ள மெக்சிகோ, புளோரிடா, தென் அமெரிக்காவிலுள்ள பெரு, ஈக்வடார், அர்ஜெண்டினா, பராகுவே, பிலிப்பைன்ஸ், மத்திய அமெரிக்க

தீவுகள் ஆகியவற்றில் தனது ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தியது. பிரான்ஸ் கனடாவிலும், இங்கிலாந்து வட அமெரிக்காவிலும் தங்கள் குடியேற்றங்களை நிறுவின. இது ஐரோப்பிய நாடுகளிடையே ஏகாதிபத்திய உணர்வை ஏற்படுத்தியது.

2. இந்தியா, சீனா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுடன் ஏற்பட்ட வர்த்தகத் தொடர்பின் காரணமாக ஐரோப்பாவில் செல்வம் குவிந்தது. இதனால் முதலாளித்துவம் (Capitalism) என்ற முறை தோன்றியது. இது ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி, பல போர்களுக்குக் காரணமானது.

3. இந்தியாவிற்கு புதிய கடல்வழி கண்டுபிடிக்கப்பட்டது. 1869-ல் சூயஸ் கால்வாய் திறக்கப்படும் வரை நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்லும் பாதையே பிரதானமான பாதையாக விளங்கியது.

4. புதிய உலகம் கண்டுபிடிக்கப்பட்டபின், செல்வத்திலும், முக்கியத்துவத்திலும் மேம்பட்டு விளங்கியது அமெரிக்கா.

5. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கடல் வழிகள் அட்லாண்டிக் கடல் பகுதியில் அமைந்திருந்ததால் மத்திய தரைக்கடல்பகுதி தனது முக்கியத்துவத்தை இழந்தது. வெனிஸ், ஜெனோவா போன்ற நகரங்கள் பொலிவிழந்தன. அதே நேரம் அட்லாண்டிக் கடலை எதிர்நோக்கியிருந்த பட்டணங்கள் பயனடைந்தன. அப்பகுதியிலிருந்த ஸ்பெயின், போர்ச்சுக்கல், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் முக்கியத்துவமடைந்தன.

6. இந்த கண்டுபிடிப்புகளின் விளைவாக ஐரோப்பிய, ஆசிய மக்களுக்கிடையே உள்ள உறவில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியது. ஐரோப்பா, ஆசியா நாடுகளை வென்று அடிமைப்படுத்தும் காலனி ஆதிக்க முயற்சி துவங்கியது.

7. இதுவரை மக்கள் கொண்டிருந்த புவியியல் அறிவு தவறு என்று தெரியவந்தது. மனிதனின் புவியியல் கருத்துக்கள் வளர்ச்சியடைந்து மேலும் இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்தக் கடல்வழி கண்டுபிடிப்புகள் ஆக்கமும் ஊக்கமும் அளித்தன.

8. ஐரோப்பிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. வாணிபம் வளர்ந்ததால் மக்களிடையே ஒரு புதிய நடுத்தர சமுதாயம் (Bourgeoisie) ஒன்று தோன்றியது. இவர்கள் வங்கித்தொழில், உற்பத்தித் தொழில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டு நல்ல வசதியான வாழ்க்கை வாழ்ந்தார்கள். தங்கள் வீடுகளை விலை உயர்ந்த பொருட்களால் அலங்கரித்தனர். இவ்வாறு மக்களின் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றமும், மாறுதலும் ஏற்பட்டது.

9. புதிய நாடுகளில் குடியேற்றங்களை ஏற்படுத்திய ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற நாடுகள் அங்கு ஏராளமான விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தின. இந்த பண்ணைகளில் விவசாயம் செய்ய அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர். இது படிப்படியாக அதிகமாகி, 'அடிமை வியாபாரமாக' உருவெடுத்தது. அடிமை வியாபாரமானது புதிய நாடுகள், கடல்வழிக் கண்டுபிடிப்புகளின் மிக மோசமான விளைவுகளில் ஒன்றாகும்.

10. குடியேற்ற நாடுகள் அமைக்கப்பட்டபோது கூடவே அங்கு கிறிஸ்தவ மதமும் பரப்பப்பட்டது. கிறிஸ்தவ மிஷினரிமார்கள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அங்கிருந்த மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றினார்கள். இவ்வாறு உலகம் முழுவதும் கிறிஸ்தவ மதம் பரவுவதற்கு கடல்வழிக் கண்டுபிடிப்புகள் வழிவகுத்துக் கொடுத்தது.

# 3. மறுமலர்ச்சி

கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே பழைய மற்றும் இடைக்கால அமைப்புகள் கோட்பாடுகள், பண்பாடுகள் ஆகியன அழியத் தொடங்கின. அதைத் தொடர்ந்து, எதையும் ஆராய்ந்து அறிவதில் மக்கள் நாட்டம் செலுத்தத் தொடங்கினர். இவ்வாறு கி.பி. 1300 முதல் 1650-க்குப் இடைப்பட்ட காலத்தில் "ஐரோப்பியரின் எண்ணங்களிலும் கருத்துக்களிலும் தோன்றிய புதிய நாகரிக முறையே மறுமலர்ச்சி" (Renaissance) எனப்பட்டது. இதுவரை நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்து வந்த ஐரோப்பிய சமுதாயம், மறுமலர்ச்சிக் காலம் முதல் அறிவை அடிப்படையாகக் கொண்டு வாழத் தொடங்கியது.

## மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்றால் மறு பிறவி அல்லது புதிய பிறவி எனப்பொருள். பரந்த பொருள் கொள்ளும்போது, "கடைத்தோற்றத்தையும் கருதியதை வெளியிடுதலையும்" (Emancipation and Expression) மறுமலர்ச்சி குறிக்கிறது. மறுமலர்ச்சிக் காலத்தில், பண்டைய கிரேக்க மற்றும் ரோமானிய இலக்கியங்களிலும் கலைகளிலும் ஆர்வம் கொண்டு அவற்றைக் கற்க மக்கள் விரும்பினர். அதன் விளைவாக, கலை, ,இலக்கியம், அறிவியல், தத்துவம், அரசியல், சமயம் ஆகியவற்றில் பழையனவற்றைச் சார்ந்தும் அவற்றிலிருந்து வேறுபட்டும் பல புதிய சாதனைகள் உருவாயின.

## மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

சுமார் 300 ஆண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பிய சமூகத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, தோன்றுவதற்கான காரணங்கள் பல. அவை,

1. **தேசிய திருச்சபைகளின் வளர்ச்சி** : இடைக்காலத்தின் ஆரம்பத்தில் போப்புகளின் ஆணைகளுக்கு மன்னர்களும் மக்களும் மதிப்பளித்ததுடன் அவற்றிற்கு கட்டுப்பட்டும் இருந்தனர். ஆனால், இடைக்காலத்தின் பிற்பகுதியில் தோன்றிய சுதந்திர நாடுகளில் உருவான புதிய திருச்சபைகள், போப்புகளின் ஆணைகளுக்குக் கட்டுப்படாததுடன் அவற்றை குறை கூறவும் தொடங்கின.

2. **சிலுவைப் போர்கள்** : சிலுவைப் போர்களில் பங்குகொண்ட பெரும்பாலான நிலமானியப் பிரபுக்கள், போர்களில் தங்கள் செல்வத்தை இழக்கவே, தங்களின் நிலங்களை விற்றனர். இதனால் பிரபுக்களின் ஆதிக்கம் குறைந்து, நிலமானிய முறை வீழ்ச்சியுற்றது. பண்டைய கிரேக்க, ரோமானியக் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவ சிலுவைப் போர்கள் உதவின. அப்போர்களில் அரேபியரிடமிருந்து கிறித்தவர்கள் கற்றவை, அவர்களிடம் புதிய சிந்தனைகளை ஏற்படுத்தின.

3. **கான்ஸ்டான்டிநோபிள் வீழ்ச்சி** : கி.பி.1453-ல் கான்ஸ்டான்டிநோபிளை துருக்கியர் கைப்பற்றியதால், அங்கு வாழ்ந்த கிரேக்க அறிஞர்கள் தங்கள் இலக்கியங்களுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடியேறினர். அந்நாடுகளில் அவர்கள் பெற்ற ஊக்கத்தால், மனிதனின் உயர்ந்த பண்புகள், அன்றாடப் பிரச்னைகள், உலகம் ஆகியன பற்றிய புதிய இலக்கியங்களை அவர்கள் உருவாக்கினர். அவ்விலக்கியங்கள் தோன்றியவுடன் பண்டைய கிரேக்க, ரோமானிய இலக்கியங்களின் பெருமைகள் பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கினர்.

4. கீழை நாடுகளுடன் தொடர்பு: சிலுவைப் போர்களில், கீழை நாட்டு மக்களுடன் ஐரோப்பிய வீரர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது. எதையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் கீழை மக்களின் பண்பாட்டை, ஐரோப்பியரும் பின்பற்ற ஆரம்பித்தனர்.

5. புதிய கண்டுபிடிப்புகள் : திசை காட்டும் கருவி கண்டுபிடிக்கப்பட்டதால், உலகின் பல பகுதிகளுக்கு புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. வில்லியம் காக்ஸ்டன் கண்டுபிடித்த அச்சு இயந்திரத்தால் புத்தகங்களின் எண்ணிக்கையும் விநியோகமும் அதிகரித்தன. அவற்றை வாங்கிப் படித்து தங்கள் அறிவை மக்கள் வளர்த்தனர்.

6. செல்வந்தர்களின் உதவி : உழைப்பு, அறிவு, திறமை ஆகியன கொண்ட கலைஞர்களை பிற்கால கிறித்தவத் துறவிகளும், அரசர்களும், வணிகக் குடும்பங்களும் பொருள் உதவி செய்து ஆதரித்தன.

7. வட்டார மொழிகளில் இலக்கியங்கள் : இடைக்காலத்தில் இலத்தீன் மொழியில் மட்டுமே இலக்கியப் படைப்புகள் எழுதப்பட்டன. உலகின் கடின மொழிகள் இரண்டில் ஒன்றான இலத்தீன் மொழி (மற்றொன்று கிரேக்க மொழி) இலக்கியங்களை சிலரால் மட்டுமே படிக்க முடிந்தது. ஆனால், மறுமலர்ச்சிக் காலத்தில், வட்டார மற்றும் தேசிய மொழிகளில் பல நூல்கள் எழுதப்பட்டன. அவற்றை சாதாரண மக்களும் படிக்க முடிந்ததால் மறுமலர்ச்சி இயக்கம் வேகமாகப் பரவியது.

8. பல்கலைக்கழகங்கள் : ஐரோப்பாவில், குறிப்பாக இத்தாலியில் பல பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் நிறுவப்பட்டன. அவற்றில் சமயம் சார்ந்த மற்றும் சமயம் சாராத பாடங்கள் போதிக்கப்பட்டன. இதனால் மறுமலர்ச்சியின் முக்கிய அம்சான வாழ்க்கையைப் பற்றிய கருத்துக்கள் மக்களிடையே பரவ வழி ஏற்பட்டது.

9. சமயச் சீர்திருத்த இயக்கம் : கிறித்தவத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளை எதிர்த்து எழுந்த சமய சீர்திருத்த இயக்கத்தால், ஐரோப்பிய மக்களுடைய சிந்தனையில் புரட்சிகரமான மாறுதல் எற்பட்டது. மக்கள் சுயமாகச்

சிந்திக்கவும் செயல்படவும் தொடங்கினர். இதனால் பகுத்தறிவின் அடிப்படையில் சமயச் சார்பற்ற இலக்கியங் களையும், கலைச் சின்னங்களையும் பலர் படைத்தனர்.

10. அறிஞர்களின் பங்கு: ஜான் விக்ளிஃப் உட்பட பல அறிஞர்களும் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்தனர்.

ஜான் விக்ளிஃப்(கி.பி.1320-1384):

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரான ஜான் விக்ளிஃப்; திருச்சபையின் ஊழல்கள், குறைகள், போப் மற்றும் குருமார்களின் ஆடம்பர வாழ்க்கை ஆகியன பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்தார். பைபிளே கிறித்தவர்களின் வழிகாட்டி. புண்ணியத் தலங்களை தரிசிப்பதாலோ, சடங்குகளாலோ பயன் இல்லை. திருச்சபையும் அரசும் வேறுபட்ட நிறுவனங்கள். கிறித்தவம் கூறும் பொருண்மை மாற்றக் கோட்பாடு தவறானது' என விக்ளிஃப் கருத்து தெரிவித்தார்.

ஜான் ஹஸ் (கி.பி.1373 - 1415)

ஜான் விக்ளிஃபின் சீடரான ஜான் ஹஸ், பொஹீமியாவில் இருந்தார். பிராக் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பட்டம் பெற்ற அவர், அதே பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார். கிறித்தவ மதத்திலுள்ள குறைகளை சுட்டிக்காட்டியதுடன், பைபிளுக்கு மாறாக திருச்சபையைச் சேர்ந்தவர்கள் நடப்பதை மக்களுக்கு எடுத்துக் கூறினார். நேபிள்ஸ் அரசரை எதிர்க்க ஆகும் செலவுக்காக, போப் இருபத்து மூன்றாம் ஜான், பாவ மன்னிப்புச் சீட்டு விற்பதையும், குருமார்களின் பணவசூலையும் ஹஸ் கடுமையாக எதிர்த்தார்.

பெத்லஹேம் திருக்கோயில் போதகராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் (கி.பி.1402) அவர் செய்த சொற்பொழிவுகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அவர் எழுதிய டி இக்ளிசியா என்ற நூல் அவருடைய தத்துவத்தை விளக்குகிறது. ஹஸ்ஸின் கருத்துக்கள், திருச்சபையின் கௌரவத்தை பெரிதும் பாதித்ததால், கி.பி.1409-ல் ஜான் ஹஸ் மதவிலக்கு செய்யப்பட்டார். பின்னர் அவர் மீது 39 குற்றங்கள் சுமத்தப்பட்டு, அவருக்கு மரண தண்டணை விதிக்கப்பட்டது. 1415-ஆம் ஆண்டில் தீயிலிடப்பட்டு ஹஸ்ஸின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பதிமூன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய சிறந்த கல்வியாளர், சிந்தனையாளர், தத்துவ மேதை மற்றும் அறிவியல் அறிஞர் ரோஜர் பேகன் ஆவார். கல்வியை மக்களுக்குப் புகட்டுவதில், தானே பல சோதனைகள் செய்து பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்து அவர் வெளியிட்டார். அவருடைய கருத்துக்களை, நவீன அறிவியலின் தந்தை எனப்பட்ட சர் ஃபிரான்சிஸ் பேகன் மக்களிடையே பரப்பினார்.

## இத்தாலியில் மறுமலர்ச்சி

ஐரோப்பிய மறுமலர்ச்சியின் பிறப்பிடமாக விளங்கிய இத்தாலியை மறுமலர்ச்சி இயக்கத்தின் தொட்டில் என்றும் ஐரோப்பாவின் கல்விக்கூடம் என்றும் சொல்கின்றனர். மறுமலர்ச்சி இயக்கம் இத்தாலியில் முதலில் தோன்றக் காரணங்கள்:

1. சிலுவைப் போர்கள், வெடிமருந்து கண்டுபிடிப்பு ஆகியவற்றுடன் தேசிய அரசுகளும் நகரங்களும் தன்னுரிமை பெற்று வளர்ந்ததால் இத்தாலிய நிலமானிய முறை அழிந்தது.

2. இத்தாலியில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியால் ஏற்பட்ட செல்வச் செழிப்பு, கலை மற்றும் இலக்கிய வளர்ச்சி ஏற்பட வழி வகுத்தது.

3. மறுமலர்ச்சிக் கால அறிஞர்கள் தங்கள் படைப்புகளை வட்டார மொழியில் உருவாக்கினர்.

4. இத்தாலியில் வலுவான முடியாட்சி இல்லாததால், அங்கு அறிவியல் படைப்புக்கள் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது.

5. ஜான் விக்ளிஃப், ஜான் ஹஸ் போன்றோரின் பகுத்தறிவுப் பிரச்சாரமும், திருச்சபையில் ஏற்பட்ட பெரும் பிளவும், மக்களின் வாழ்க்கை, எண்ணங்கள் மற்றும் கருத்துக்களில் மாறுதல்களை ஏற்படுத்தின.

6. கான்ஸ்டான்டிநோபிளை துருக்கியர் கைப்பற்றிய பின்பு அங்கிருந்த அறிஞர்கள் இத்தாலிய நகரங்களில் குடியேறியதால் இலக்கியத்துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது.

இத்தாலியில் 14-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சி இயக்கம், 16-ஆம் நூற்றாண்டில் உச்சகட்டத்தை அடைந்தது. அவ்வளர்ச்சியை துறை வாரியாகப் பார்ப்போம்.

## இலக்கியம்

மனிதத் தன்மையின் வளர்ச்சிக்கும், இலத்தீன், கிரேக்க மொழிகளின் வளர்ச்சிக்கும் தாந்தே, பெட்ராக், பொக்காஷியோ ஆகியோர் அரும்பாடுபட்டனர். அவர்களும் பிற அறிஞர் களும் எழுதிய நூல்களே இத்தாலிய இலக்கிய வளர்ச்சியாகும்.

### தாந்தே (Dante-கிபி1265-1321)

ஃபிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்த தத்துவ அறிஞரும் கவிஞரும் ஆன தாந்தே, பொலக்னா மற்றும் பாத்வா பல்கலைக்கழகங்களில் கற்றவர். இலத்தீன் மொழியில் அவர் எழுதிய நூல்களுள், தெய்வீக இன்பவியல் (Divine Comedy) டி மானார்கியா, டி வலுகிரி எலோகின் ஷியா ஆகியன குறிப்பிடத்தக்கவை. தெய்வீக இன்பவியல் நூலில் அரசியல் அமைப்பின் மேன்மைகளையும், தாய்மொழியின் முக்கியத்துவத்தையும் விளக்கியுள்ளார். அவரது கருத்துக்கள், தத்துவம் மற்றும் மதத் துறைக்கு இலக்கணமாக அமைந்துள்ளன.

### பெட்ராக் (Petrarch-கிபி1304-1374)

இத்தாலியரான பெட்ராக், இலக்கிய முன்னோடி. மனித உலக வாழ்வியல் இயக்கத்தின் தந்தை (Father of Humanists) என அவர் அழைக்கப்படுகிறார். பிளாட்டோ, சிசரோ ஆகியோரின் படைப்புகளை திரட்டித் தந்ததன்மூலம் பண்டைய இலக்கியங்களுக்கு பெட்ராக் புத்துயிர் தந்தார்.

அவர் எழுதிய 14 வரிகள் கொண்ட சிறுபாடல்கள் இலக்கியச் சிறப்பு பெற்றவை. அகஸ்டின் முனிவருடன் அவர் செய்த கற்பனை உரையாடலை இரகசியம் என்ற நூலிலும், கிபி. 202-ல் நடைபெற்ற Zama போர்க்களத்தில் ஹான்னிபாலைத் தோற்கடித்த ரோம் படைத் தளபதி சிபியோ ஆஃபிரிகானாஸ்-ன் வாழ்க்கை மற்றும் வெற்றிகளை ஆப்பிரிக்கா என்ற நூலிலும், நாத்திக எழுத்தாளர்களுக்கு தான் எழுதிய கடிதங்களைத் தொகுத்து

அறிமுகமான கடிதங்கள் (Familiar Letters) என்ற தலைப்பிலான நூலிலும் பெட்ராக் வெளியிட்டார்.

அவருடைய நூல்களைச் சார்ந்து பல இலக்கிய நூல்களை இத்தாலிய ஆசிரியர்கள் வெளியிட்டனர். அவருடைய பகுத்தறிவுக் கருத்துக்கள் ஏராளமான மாணவர்களைக் கவர்ந்தன. அவர்கள் நாடு முழுதும் பின்னர் அறிவுப் பிரச்சாரம் செய்தனர்.

## பொக்காஷியோ (Boccacio-கி.பி. 1313-1375)

பெட்ராக்கின் மாணவர்களுள் தலைசிறந்தவரான பொக்காஷியோ, தன் ஆசிரியரின் பணியைத் தொடர்ந்தார். ஃபிளாரன்ஸ் நகரில் பிளேக் நோய் பரவிய போது, அந்நகரை விட்டு சில மைல்களுக்கு அப்பால் சென்ற நகர மக்கள், பொழுதைப் போக்க தங்களுக்குள் சொல்லிக் கொண்ட உணர்ச்சி மிக்க நூறு கதைகளைத் தொகுத்து இத்தாலிய மொழியில் டெக்கமரான் (Decameron) என்ற பெயரில் பொக்காஷியோ வெளியிட்டார்.

டெக்கமரான் கதைகளின் அடிப்படையில் தான் கான்டர்பரி கதைகள் (Canterbury Tales) என்ற நூலை ஆங்கிலக் கவிஞர் ச்சாசர் (Raucer) எழுதினார். ஃபியமெட்டா (Fiametta) என்ற கற்பனைக் காவியத்தையும் பொக்காஷியோ எழுதியுள்ளார்.

## பிற அறிஞர்கள்

ஃபுரியோசோ நூலை எழுதிய லூடொவிகோ அரிஸ்டோ, ஆர்கேடியா-வை எழுதிய ஜெகோபொ சென்னசாரோ, தி பிரின்ஸ், ஃபிளாரான்ஸ் வரலாறு, மேன்திரகோலா ஆகிய நூல்களை எழுதிய மேக்கியவல்லி, இத்தாலிய வரலாறு எழுதிய செஸ்கோ குய்சியார்டினி, போப்பின் அதிகாரம் பற்றிய கான்ஸ்டைனின் அன்பளிப்பு என்ற நூலில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்டிய லொரன்சோ வல்லா ஆகியோர் பிற முக்கிய அறிஞர்கள்.

**அச்சு இயந்திரம் :** இவ்வறிஞர்களின் நூல்கள், புத்தக வடிவில் கிடைக்க வசதியாக, வில்லியம் காக்ஸ்டன் கண்டுபிடித்த அச்சு இயந்திரத்தைக் கொண்டு, 15-ஆம்

நூற்றாண்டின் இடையில், ஜெர்மனியில் உள்ள மெய்ன்ஸ் நகரத்தவரான ஜான் கூடன்பர்க், அசையும் அச்சு இயந்திரத்தை உருவாக்கினார்.

கி.பி. 1465-ல் இத்தாலியில் முதல் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. முதலில் பைபிளும், தொடர்ந்து பல இலக்கியங்களும் பெரும் எண்ணிக்கையில் அச்சடிக்கப்பட்டு ஐரோப்பா முழுதும் விநியோகிக்கப்பட்டன. இதனால் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் மறுமலர்ச்சி இயக்கம் பரவியது.

## பிற கலைகளில் மறுமலர்ச்சி

மறுமலர்ச்சியால், இலக்கியத்தில் மட்டுமின்றி ஓவியம், சிற்பம், கட்டடம், இசை போன்ற நுண்கலைகளிலும் புதிய பாணிகளும் தோற்றங்களும் பின்பற்றப்பட்டன. அவை யாவும் கிறித்தவப் பாணி அல்லாத, கிரேக்க - உரோமானிய மாதிரிகளைத் தழுவியதாக இருந்தன.

### ஓவியம்

**லியனார்டோ - டா - வின்சி** (Leonardo-da-vinci) : ஃபிளாரன்ஸ் நகரில் பிறந்த இவர், கி.பி. 1452 முதல் 1519 வரை வாழ்ந்தார். மறுமலர்ச்சிக் கால ஓவியர்களுள் மிகவும் புகழ்பெற்றவர் இவரே. ஓவியம், சிற்பம், இசை, கட்டடக்கலை, கணிதம், அறிவியல், தத்துவம் ஆகிய பல கலைகளிலும் வல்லுநராக அவர் இருந்தார். அவருக்குத் தெரியாத கலையே இல்லை.

அவர் வரைந்த வண்ண ஓவியங்களுள், ஏசுவின் கடைசி விருந்து (Last Supper), மோனா லிசா (Mona Lisa) ஆகியன சாகா வரம் பெற்றவை. நம் உடலிலுள்ள ரத்தம், உடல் முழுதும் சுற்றி வருகிறது என்ற உண்மையை முதலில் கண்டுபிடித்தவரும் அவரே. மிலான் நகரப் பிரபுக்களால் ஊக்கம் பெற்ற அவரால், இத்தாலி பெருமை பெற்றது.

**மைக்கேல் ஆஞ்லோ** (Michael Anglo - கி.பி. 1475 - 1564) : சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், கட்டடக் கலைஞராகவும் ஆஞ்லோ விளங்கினார். வாடிகன்-ல் உள்ள சிஸ்டைன் தேவாலயத்தை அவரது ஓவியங்கள் அழகுபடுத்தின.

அவர் வரைந்த இறுதித் தீர்ப்பு (Last Judgement), கடவுள் வெளிச்சத்தை இருட்டிலிருந்து பிரித்தல், கடவுள் உலகத்தைப்

படைத்தல, மனிதன் நெறி தவறுதல் (The fall of man), பெரும் வெள்ளப் பெருக்கு (The Deluge) ஆகியன சிறப்பான ஓவியங்கள். தூய்மையான சலவைக் கற்களில் சிற்பங்களை வடிப்பதிலும் அவர் வல்லவராக இருந்தார். அவர் உருவாக்கிய டேவிட், மோசஸ் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. ரோமில் உள்ள புனித பீட்டரின் தேவாலயம், ஆஞ்லோவின் திட்டத்தின்படி கட்டப்பட்டதாம்.

ரஃபேல் (Raphael - கிபி. *1483-1520)* : இத்தாலிய ஓவியக் கலை ரஃபேல் காலத்தில் உச்சகட்டத்தை அடைந்தது. அவரது ஓவியங்கள் சமய உணர்வைத் தூண்டுகின்றன. அவர் தீட்டிய ஓவியங்களுள், அன்னை மேரி, ஏதென்ஸ் பள்ளி, சிஸ்டைன் மடோனா ஆகியன சிறப்பானவை.

கலைத் துறைக்கு புத்துயிரும் மெருகும் ஊட்டிய மற்ற ஓவியர்களுள் பாத்திசெல்லி (Batticelli), டிடியன், பிராமென்டி, பெர்னினி ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவருமே ஃபிளாரன்ஸ் நகரைச் சேர்ந்தவர்களே. அதனால்தான், ஃபிளாரன்ஸ் நகரமே இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கத்தின் பிறப்பிடம் எனப்படுகிறது.

## சிற்பம்

இடைக்கால கட்டடக் கலையுடன் இணைந்ததாக சிற்பக்கலை இருந்தது. இத்தாலியில் மறுமலர்ச்சி ஏற்பட்டபோது சிற்பக்கலை தனித்தன்மை பெற்று வளர்ந்தது. அக்காலத்திய சிற்பங்களுள் டொனடெல்லோ (Donatello) உருவாக்கிய, "இறந்து கிடக்கும் கோலியாத்தின் மீது வெற்றியுடன் டேவிட் நிற்கும் காட்சி "யைக் கொண்ட சிற்பம் சிறப்பானது.

அடிமை ஒருவன் திருப்பித் தாக்குகின்ற காட்சி, மக்கள் மீது மோசஸ் இஸ்ரவேல் சீற்றம் கொள்கின்ற காட்சி, பிரான்சிலுள்ள மெடிசியின் கல்லறை மீது துயரத்தில் ஆழ்ந்து கிடக்கும் பல சிற்பங்கள், தன் கல்லறையின் மீது வைப்பதற்காக வடித்த "ஏசுவின் சடலத்தின் மீது துக்கத்துடன் கன்னி மேரி கை வைத்துள்ள சிற்பம்" ஆகியவற்றை மைக்கேல் ஆஞ்லோ வடித்துள்ளார்.

## பிற ஐரோப்பிய நாடுகளில் மறுமலர்ச்சி

இத்தாலியைத் தொடர்ந்து மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் மறுமலர்ச்சி இயக்கம் வேகமாகப் பரவியது.

### ஜெர்மனி

இத்தாலிக்கு அருகில் ஜெர்மனி இருந்ததால், இத்தாலியை அடுத்து மறுமலர்ச்சி இயக்கம் ஜெர்மனியில் தோன்றியது. ஜெர்மானிய நகரங்களான ஆக்ஸ்பர்க், நூரன்பர்க், மூனிச், வியன்னா ஆகியவற்றில் மறுமலர்ச்சி தொடங்கியது. அல்ரிச் வன் ஹட்டன், தெளிவற்ற மனிதர்களின் கடிதங்கள் என்ற நூலை எழுதிய கொராடஸ் ரூபியான்ஸ், துர்ரர், கொல்பெயின் ஆகியோர் ஜெர்மானிய ஓவியர்கள்.

மற்ற கிரகங்கள் சூரியனை முட்டை வடிவில் சுற்றுகின்றன என்று கூறிய ஜான் கெப்ளர், பேசல் பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர் பாராசெல்ஸ், இசைக் கலைஞர் ஆர்லேன்டஸ் லாசஸ் ஆகியோர் பிற ஜெர்மானிய மறுமலர்ச்சியாளர்கள்.

### நெதர்லாந்து (ஹாலந்து)

"மனிதனின் குணநலன்களின் இயக்கத்தின் இளவரசர்" எனப்பட்ட தெசிதேரியஸ் எராஸ்மஸ், மடமையின் புகழ்ச்சி (Praise of Folly) அமைதியின் முறையீடு (The Complaint of Peace) ஆகிய நூல்களை எழுதினார். செம்மறி ஆட்டுக்குட்டியை வழிபடுதல் என்ற ஓவியம் வரைந்த ஜன் வன் எய்க், அப்பாவிகளின் படுகொலை என்ற ஓவியம் வரைந்த பீட்டர் பிறியுகெல், ஹூபர்ட் ஆகியோர் சிறந்த நெதர்லாந்துக் கலைஞர்கள்.

### பிரான்ஸ்

சமன்பாடுகளின் கோட்பாட்டை விளக்கிய பிரான்சிஸ் வைய்டே, மருத்துவர் அம்புரூஸ் பாரி, இலக்கியகர்த்தா ரபேலெய்ஸ், "கட்டுரைகள்" என்ற உலகப் புகழ் பெற்ற நூல் தந்த மைக்கேல் டி மான்டெய்க் ஆகியோர் சிறப்பானவர்கள்.

## ஸ்பெயின்

ஓவியர்கள் லூயிஸ் டி மோரலஸ், எல் கிரிகோ, இன்பவியல் நாடகங்களையும் கதைகளையும் எழுதிய லோப் டி வேகா, டான் குவிசாட் (Don Quisote) என்ற புதினம் தந்த மிகுவல் டி செர்வான்டஸ் ஆகியோர் ஸ்பெயினின் சிறந்த மறுமலர்ச்சியாளர்கள்.

## இங்கிலாந்து

"உடோபியா" நூலை எழுதிய சர் தாமஸ் மூர், "நூவும் ஓரேகனும்" என்ற நூல் படைத்த சர் தாமஸ் பேகன், கான்டர்பரி கதைகள் எழுதிய ச்சாசர், ஃபேரி குய்ன் என்ற காப்பியத்தை உருவாக்கிய எட்மண்ட் ஸ்பென்சர், டாக்டர் பவுஸ்டஸ் என்ற நாடகத்தை எழுதிய கிறிஸ்டஃபர் மார்லோ, மர்ச்சண்ட் ஆஃப் வெனிஸ், ஹேம்லட், மேக்பத், ரோமியோ - ஜூலியட், ஆண்டனி கிளியோபாட்ரா, கிங் லியர் உட்பட பல நாடகங்களை எழுதிய வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆகியோர் இங்கிலாந்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர்.

## மறுமலர்ச்சியின் விளைவுகள்

இத்தாலியிலிருந்து இங்கிலாந்து வரை, பல துறைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பல முக்கிய நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது. அவை,

1. மறுமலர்ச்சியால், மூட நம்பிக்கையை ஒழித்து, சிந்தித்து செயல்படும் திறமையை ஐரோப்பியர் பெற்றனர்.
2. பண்டைய இலக்கியங்களை ஐரோப்பிய மக்கள் கற்கத் தொடங்கியதும் அவர்களிடம் ஆய்வுக் கண்ணோட்டம் வளர்ந்தது.
3. கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்கும் ஆவலை மறுமலர்ச்சி தூண்டியது. வெர்ஜில், செனேக்கா, பிளாட்டோ, அரிஸ்டாட்டில் ஆகிய இலக்கிய மேதைகளின் படைப்புகளுக்கு கூடுதல் விளம்பரம் கிடைத்தது.
4. இலத்தீன் மொழியின் வளர்ச்சி குன்றி, ஆங்கிலம், ஸ்பானிஷ், ஜெர்மன், இத்தாலி மொழிகள் ஆக்கம் பெற்றன.

5. மறுமலர்ச்சியில் ஏற்பட்ட ஆர்வம் மக்களிடையே படைக்கும் ஆற்றலை வளர்த்தது. அதன் விளைவாக புதிய கண்டுபிடிப்புகள் தோன்றின. புதிய நாடுகள் காண வழி ஏற்பட்டது.

6. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதால் எல்லோரும் கல்வியறிவு பெற முடிந்தது.

7. மறுமலர்ச்சியால் தோன்றிய அறிவியல் இயக்கமே, "தொல்பொருள் ஆய்வு முறை"ஆகும்.

8. மறுமலர்ச்சி இயக்கம் மனிதாபிமானச் சிந்தனையைத் தூண்டியது. அச்சிந்தனையை ஆதரித்தோர், "மனிதத் தன்மையைப் போற்றுவோர்" (Humanists) என்றும் அவர்களால் கையாளப்பட்ட இயல்கள் "மனிதத் தன்மை இயல்கள்"என்றும் அழைக்கப்பட்டன.

9. மக்களின் சிந்திக்கும் ஆற்றல் வளர்ந்து மதச் சீர்திருத்தம் ஏற்பட்டது.

10. மக்களிடையே தேசிய உணர்வு தோன்றி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஹாலந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் போன்ற தேசிய அரசுகள் தோன்றின.

11. திருச்சபைக்கு எதிரான கருத்துக்களை பண்டைய இலக்கியங்கள் வளர்த்ததால் திருச்சபையின் செல்வாக்கு குறைந்தது.

12. மனித உலக வாழ்வை விளக்கும் பல இலக்கியங்கள் தோன்றி மறுமலர்ச்சிக்கு புத்துணர்வூட்டின.

# 4. சமய சீர்திருத்த இயக்கம்

தேசிய நாடுகள் வீறுகொண்டு எழுந்த காலத்தில், ஜெர்மனி மட்டும் சிற்றரசுகளாகப் பிரிந்து ஒற்றுமை குன்றி நிற்பதை ஜெர்மானியர்களால் சகிக்க முடியவில்லை. எனவே ஜெர்மனியின் முன்னேற்றத்திற்காக எவ்வித இயக்கத்திற்கும் ஆதரவு தர அவர்கள் காத்திருந்தனர். இதனால் தான் சமய சீர்திருத்த இயக்கம் முதலில் ஜெர்மனியில் தோன்றியது.

## சமய சீர்திருத்த இயக்கத்திற்கான காரணங்கள்

கிறித்தவ திருச்சபையில் காணப்பட்ட ஊழல்களே சமய சீர்திருத்த இயக்கம் தோன்ற முக்கிய காரணம். அதைத் தவிர வேறு பல காரணங்களும் அதை வளர்த்துவிட்டன. அவை,

1. திருச்சபையில் ஊழல் : திருச்சபைகளில் நிர்வாக ஊழல்களும் குறைகளும் மிகுந்திருந்தன. கீழ்த்தரமான தனிப்பட்ட வாழ்க்கை கொண்ட பல மத குருமார்கள் பக்திமான்களைப் போல நடித்தனர்.

2. போப்பின் வரம்பில்லா அதிகாரம் : அளவற்ற செல்வாக்கும் அதிகாரமும் உடையவராக போப் இருந்தார். போப்பின் ஆதரவைப் பெற்ற குருமார்களே திருச்சபைகளில் மத அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். போப்பின் வரம்பற்ற அதிகாரங்களை நீக்க வேண்டுமென மக்களும் மன்னர்களும் நினைத்தனர்.

3. திருச்சபையின் அரசியல் தலையீடு : திருச்சபையின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க, அது அரசியலிலும்

தலையிட்டது. இதனால் மதத்தின் புனிதத்துவம் கெட்டது. எனவே திருச்சபையில், ஒழுக்கத்தையும் தெய்வ பக்தியையும் நிலைநிறுத்த வேண்டுமென பலர் விரும்பினர்.

4. திருச்சபையின் வரிவிதிப்பு : திருச்சபையின் வரிவிதிப்பு அதிகமானபோது அவ்வரிச்சுமையை பாமர மக்களால் தாங்க முடியவில்லை. அவ்வாறு பெறப்பட்ட வரிப்பணமும் தவறாகப் பயன்படுத்தப்பட்டதை அறிந்த மக்கள், வரிப்பளுவைக் குறைத்து திருச்சபையைச் சீர்திருத்த வேண்டுமெனக் கருதினர்.

5. திருச்சபையின் தவறுகள் : மக்கள் உணவின்றி வாடும்போது திருச்சபையினர் ஆடம்பர வாழ்வு வாழ்ந்தனர். இதனால் மக்களுக்கு போப் மீது இருந்த நம்பிக்கை குறைந்தது. கல்வி போதிக்கவும், தேவையானவர்களுக்கு உதவி செய்யவும் திருச்சபை தவறியது.

6. தேசிய திருச்சபைகளின் எழுச்சி: பதினோராம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்ச்சி வளர்ந்தபின், தம்மீது போப் ஆதிக்கம் செலுத்துவதை ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் மன்னர்கள் விரும்பவில்லை. இதனால், அந்நாடுகளின் திருச்சபைகளில் மன்னர்களின் செல்வாக்கு வளர்ந்து, போப்பின் செல்வாக்கு குறைந்தது.

7. மறுமலர்ச்சியின் பாதிப்பு: மறுமர்ச்சி இயக்கம், மக்களை சிந்திக்கவும் ஆராய்ந்து பார்க்கவும் தூண்டியது. போப்பின் கருத்தும் ஆணையும் ஆராயப்பட்டதால், அவை நம்ப முடியாதவையாகத் தோன்றின. மறுமலர்ச்சிக்குப் பின் எதையும் சிந்தித்து முடிவெடுக்க மக்கள் முயன்றனர். கல்வியறிவு பரவியதால் ஏன் என்ற கேள்வியும் எழ ஆரம்பித்தது.

8. சிலுவைப் போர்கள்: சிலுவைப் போர்களில் பங்குகொண்ட கிறித்தவர்கள், பிறமதத்தினர்க்கு உள்ள உரிமைகளையும், தங்கள் உரிமைகளை போப் எவ்வாறு தடுத்தார் என்பதையும் உணர்ந்தனர். பிற மதங்களில் உள்ள உயர் கொள்கைகளை அறிந்து அவற்றை தங்கள் மதத்தில் சேர்த்து சீர்திருத்த அவர்கள் விரும்பினர்.

9. தேசிய உணர்வின் வளர்ச்சி: கிபி. 16-ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவில் பல தேசிய நாடுகள் தோன்றின. ஒவ்வொரு நாட்டு மக்களும் சுதந்திரமாகச் செயல்பட விரும்பினர். கிறித்தவ மதத் தலைவர் போப், ரோமில் இருந்ததால் அவரை இத்தாலியர் என்றும் ரோம் திருச்சபை வேற்று நாட்டு திருச்சபை என்றும் பிறநாட்டவர் கருதினர். தேசிய அரசுகளுக்கே ஏராளமாகப் பணம் தேவைப்பட்டமையால் இவ்வரசுகள், போப்பாண்டவர் நிதி திரட்டுவதை எதிர்த்தன.

திருச்சபையைத் திருத்த ஜான் விக்ளிஃப் மற்றும் ஜான் ஹஸ் செய்த முயற்சிகள், திருச்சபையில் ஏற்பட்ட பெரும் பிளவு, திருச்சபையின் முறைகேடுகளைக் களைய முயன்ற கன்சிலியர் இயக்கம் ஆகியவற்றால் சமயச் சீர்திருத்த இயக்கம் மக்களிடையே பரவியது.

* திருச்சபை, ஊழலின் பிறப்பிடமாகவும் போப், ஊழலின் மொத்த உருவமாகவும் இருந்ததால் ஊழலைக் களைந்து, ஒழுக்கக் கேடுகளை நீக்க சமய சீர்திருத்த இயக்கம் உருவாயிற்று.

## ஜெர்மனியில் சமயச் சீர்திருத்தம்

மார்டின் லூதர், வோம்ஸ் சபை, ஸ்பியர்ஸ் சபைகள், ஆக்ஸ்பர்க் சதாதானம் ஆகியன சமய சீர்திருத்த இயக்கத்தின் முக்கிய அங்கங்கள்.

### மார்டின் லூதர் (கிபி. 1483-1546)

"ஜெர்மனியில் சமய சீர்திருத்த இயக்கத்தை தோற்றுவித்தவர் மார்டின் லூதர்". 1483-ல் ஜெர்மனியிலுள்ள ஐசன்பெனில் என்ற இடத்தில் பிறந்து, எர்ஃபர்டு பல்கலைக் கழகத்தில் பயின்ற லூதர், சிறந்த பேச்சாளரும் எழுத்தாளரும் ஆவார். கிபி. 1508-ல் சமய இயல் பேராசிரியராக விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் லூதர் பணியாற்றினர்.

ஹீப்ரு, கிரேக்க மொழிகளிலிருந்த மூல பைபிளைக் கற்றதுடன், புனித பால், புனித அகஸ்டின் ஆகியோரின் கருத்துக்களை ஊன்றிப் படித்தார். 1511-ல் ரோம் சென்ற லூதர், அங்கு போப் பத்தாம் லியோவின் வாழ்க்கை, அவரைச் சுற்றியிருந்த ஒழுக்கக் கேடுகள் ஆகியவற்றைக் கண்டார்.

*பாவமன்னிப்புச் சீட்டு : 1517-ல்* ஜான் டெட்சல் (John Tetzell) என்பவர் போப் பத்தாம் லியோவின் ஆணையின் பேரில், புனித பீட்டர் ஆலயத்தைக் கட்டுவதற்காக பாவ மன்னிப்புச் சீட்டை (Indulgences) ஜெர்மனியில் விற்றபோது, அதை மார்டின் லூதர் கடுமையாக எதிர்த்தார். "கடவுள் மட்டுமே பாவங்களை மன்னிப்பவர்; போப்பிற்கு மன்னிப்பளிக்கும் செல்வாக்கு இல்லை; போப்பின் மன்னிப்பு, கிறித்தவத்திற்கு ஊறு விளைவிக்கும்; பாவ மன்னிப்புச் சீட்டு ஏழைகளையும் ஏமாளிகளையும் சுரண்ட நடைபெறும் செயல்; எந்த இடைத் தரகரும் (போப்) இன்றி எவரும், தாமே பாவ மன்னிப்பு பெறலாம்" என்றார் லூதர்.

பாவ மன்னிப்பை எதிர்த்து, *1518-ல் 95* வாதங்களை (Theses) இலத்தீன் மொழியில் எழுதி, விட்டன்பர்க் ஆலயத்தின் கதவில் லூதர் ஒட்டினார். லூதரின் வாதங்கள், ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு, பின்னர் அச்சிட்டு புனித ரோமானியப் பேரரசு முழுதும் விநியோகிக்கப்பட்டது. லூதரின் வாதங்கள் போப்புக்கு சவாலாக அமைந்தன. இதனால் ஆத்திரமடைந்த போப் பத்தாம் லியோ, லூதரை திருச்சபையிலிருந்து வெளியேற்றுவதற்காக, *1520-ல்* அச்சுறுத்தும் ஆணையை அனுப்பினார். பின்னர் லூதர் மதவிலக்கும் செய்யப்பட்டார். அம்மதவிலக்கு ஆணையை பொது இடத்தில் லூதர் கொளுத்தினார். அதுவே சமய சீர்திருத்தப் புரட்சிக்கு தீ மூட்டியது.

### வோம்ஸ் சபை (கிபி. 1521)

திருச்சபைக்கு எதிரான கொள்கைகளைப் பரப்பிய மார்டின் லூதர் தண்டிக்கப்பட வேண்டும் என புனித ரோமானியப் பேரரசர் ஐந்தாம் சார்லஸ்-ஐ போப் கேட்டுக் கொண்டார். அதன்படி, ஜெர்மானிய சிற்றரசர்கள் முன்னிலையில், கிபி. 1521-ல் வோம்ஸ் (Worms) நகரில் லூதரை அழைத்து சார்லஸ் விசாரித்தார் . அதுவே வோம்ஸ் சபை எனப்பட்டது. அச்சபையில், தன் செயல்கள் சரியானவையே என லூதர் வாடினார். ஜெர்மானிய சிற்றரசர்களின் ஆதரவு லூதருக்கு இருந்ததால், "லூதர் சட்டத்தின் காப்பிழந்தவர்" என்று தான் அறிவித்ததற்கு சபையின் ஒப்புதலைப்

பெறுவதற்கு மேல் வேறெதையும் சார்லஸால் செய்ய முடியவில்லை.

### ஸ்பியர்ஸ் சபை (கி. பி. 1526 &1529)

கிபி. 1526-ல் கூட்டப்பட்ட ஸ்பியர்ஸ் சபையில் சமயப் பிரச்னையை ஜெர்மானிய இளவரசர்கள் மீண்டும் எழுப்பினர். ஒவ்வொரு இளவரசரும் தாம் பின்பற்ற விரும்பும் சமயத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ள ஸ்பியர்ஸ் சபை (Diet of spires) அனுமதி வழங்கியது. லூதரினியக் கோட்பாட்டை மறைமுகமாக ஏற்றுக் கொள்வதே இவ்வனுமதியின் உள்நோக்கம்.

ஆனால் ஐரோப்பாவில் சமய ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் என ஐந்தாம் சார்லஸ் நினைத்ததால், 1529-ல் கூடிய இரண்டாவது ஸ்பியர்ஸ் சபை, முதல் சபை அளித்த அனுமதியை ரத்து செய்தது. சார்லஸின் முடிவை ஜெர்மானிய மன்னர்கள் எதிர்க்கவே, அவர்கள் எதிர்ப்பாளர்கள் (Protestants) எனப்பட்டனர்.

### ஆக்ஸ்பர்க் சமாதானம்

மார்டின் லூதரின் செல்வாக்கு உயர்வது உண்டு பதைத்த ஐந்தாம் சார்லஸ், 1592-ல் ஆக்ஸ்பர்க்-ல் பாராளுமன்றத்தைக் கூட்டி லூதரை நாடு கடத்த எண்ணினார். ஆனால் அதை லூதரின் ஆதரவாளர்கள் எதிர்த்தனர். இதனால் உள்நாட்டுப் போர் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது. பிராடஸ்டண்டு இளவரசர்கள் சேர்ந்து ஸ்க்மால்கால்ட் லீக் (Schmalkalde League)-ஐ உருவாக்கினர். போர் தொடங்கும் முன், 1546-ல் லூதர் இறந்தார். 1546 முல் 1552 வரை நடைபெற்ற ஸ்க்மால்கால்ட் போர்கள், பஸ்ஸாவ் (Passau) உடன்பாடு (1552) மூலம் முடிவுற்றன. தொடர்ந்து, 1555-ல் ஆக்ஸ்பர்க் சமாதானம் (Peace of Augsburg) கையெழுத்தாயிற்று. அதன்படி,

1. ஜெர்மானிய சிற்றரசர்கள், தாங்கள் விரும்பும் சமயத்தை பின்பற்றலாம்.

2. சிற்றரசர்கள், தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை தாமே வைத்துக் கொள்ளலாம்.

3. லூதரின் செல்வாக்கு உள்ள பகுதிகளில் வாழும் கத்தோலிக்கர்கள், லூதரின் கொள்கையை பின்பற்றலாம்.

ஆக்ஸ்பர்க் சமாதானம் மூலம் ஜெர்மானியில் இதுவரை நடைபெற்ற சமயப் போர்கள் முடிவுற்றன; போப்பிடமிருந்து ஜெர்மனி விடுபட்டது.

## சுவிட்சர்லாந்தில் சமயச் சீர்திருத்தம்

உல்ரிச் சுவிங்லியும் ஜான் கால்வின்-ம் சுவிட்சர்லாந்தில் சமயச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தனர்.

### உல்ரிச் சுவிங்லி (கி. பி. 1484 - 1531)

மார்டின் லூதரின் கொள்கையில் ஈடுபாடு கொண்ட உல்ரிச் சுவிங்லி (Ulrich Zwingli) சுவிட்சர்லாந்தில் சமயப் புரட்சியைத் தொடங்கினார். செல்வக் குடும்பத்தில் பிறந்து, வியன்னா, பேசல் ஆகிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற சுவிங்லி, 1518-ல் சூரிச் (Zurich) நகரில் சமயக் குருவாக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டில் "போப்பின் ஆதிக்கத்தை எதிர்த்தும், விவிலியம் மட்டுமே கிறித்தவர்களின் வழிகாட்டி" என்றும் சுவிங்லி கருத்து வெளியிட்டார். லூதரைவிட தீவிரமான கருத்துக்களைக் கொண்ட சுவிங்லி, தன் கோட்பாடுகளைப் பரப்புவதற்காக போர் தொடுக்கவும் தயாராக இருந்தார்.

1529-ல் கத்தோலிக்க சமயத்திற்கும் சுவிங்லி சமயத்திற்கும் இடையில் போர் தொடங்கியது. அதில் தோற்கடிக்கப்பட்ட சுவிங்லி, 1531-ல் கொல்லப்பட்டார். பின்னர் ஏற்பட்ட காப்பெல் உடன்படிக்கையின்படி ஒவ்வொரு மாகாணமும் பின்பற்ற வேண்டிய சமயத்தை, அந்த மாகாணத்து அரசாங்கமே தீர்மானிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டது.

### ஜான் கால்வின் (கி. பி. 1509 - 1564)

பிரான்சில் உள்ள நோயன்-ல் நடுத்தரக் குடும்பத்தில் ஜான் கால்வின் பிறந்தார். பாரிஸ் பல்கலைக் கழகத்திலும், ஆர்லியன்ஸ் பல்கலைக்கழகத்திலும் ஜான் கால்வின் (John Calvin) கல்வி கற்றார். 1533-ல் பிராடஸ்டண்டு சமயத்தில் அவர் சேர்ந்தார். பிரான்சில் பிராடஸ்டண்டு சமயத்தை ஒடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, சுவிட்சர்லாந்தில்

பேசல் எனுமிடத்தில் கால்வின் தஞ்சம் புகுந்தார். பின்னர், 1541-ல் ஜெனிவா சென்று மக்களை ஒன்று சேர்த்து தலைமைப் பதவியையும் சமய தலைமைப் பதவியையும் அவர் பிடித்துக் கொண்டார். அதுமுதல் 1564 வரை எதேச்சதிகாரியாக இருந்து ஜெனிவாவை கால்வின் ஆட்சி செய்தார். ஜெனிவாவின் சமுதாயம், அரசியல் ஆகியவை பிராடஸ்டண்டு சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டன.

தான் எழுதிய "கிறித்தவ சமயத்தின் சட்டத் தொகுப்பு" (Institute of the Christian Religion) எனும் நூலில் தன் சமயக் கருத்துக்களை கால்வின் கூறியுள்ளார்.

கால்வீனிய சமயம், சுவிட்சர்லாந்தில் மட்டுமின்றி மேற்கு ஐரோப்பா முழுதும் பரவியது. அவர் ஏற்படுத்திய கலைக் கழகம் (Academy) பிராடஸ்டண்டு சமய போதகர்களுக்கு பயிற்சி அளித்தது. பிரான்சின் ஹியூகோனாக்கள் (Huguenots) இங்கிலாந்தின் பியூரிடன்கள் (Puritans) ஸ்காட்லாந்தின் பிரஸ்பிடீரியன்கள் (Presbyterians) ஆகியோர் கால்வீனிய சமயத்தைச் சார்ந்தவர்களே.

## பிரான்சில் சமய சீர்திருத்த இயக்கம்

பிரான்சில் சமய சீர்திருத்த இயக்கம் அரசியலுடன் பின்னிப் பிணைந்து இருந்தது. பிரெஞ்சு அரசர் கால்வீனியத்தை தடை செய்ய முயலவே, கால்வின், சுவிட்சர்லாந்து சென்றார். எனினும் தன் கருத்துக்களை தாய்மொழியான பிரெஞ்சு மொழியில் எழுதியதால், அவரது கருத்துக்கள் பிரான்சில் பரவின. பிரெஞ்சுக் கால்வினியர்கள், ஹியூகோனாக்கள் எனப்பட்டனர்.

16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஜாக்குய்ஸ் லாஃபேவர் (Jacques Lafevre) என்பவர் சமய சீர்திருத்தக் கருத்துக்களை பிரான்சில் பரப்பினார். லூதரின் கருத்துக்களும் பிரான்சில் பரவின. பிரெஞ்சு மன்னர் முதலாம் ஃபிரான்சிஸ் பிராடஸ்டண்டு சமயத்திற்கு ஆதரவளித்தார். ஆனால் 1525-ல் நடைபெற்ற பாவியா போரில் பிரெஞ்சு மன்னர் பிரான்சிஸ், ஐந்தாம் சார்லஸிடம் கைதியாகப் பிடிபட்டார். இதனால் அரசின் ஆதரவு பெற்ற

கத்தோலிக்கர்கள், பிராடஸ்டண்டுகளை எதிர்த்துப் போராடினர். பிரான்ஸ் விடுதலையடைந்த பின்னர், பிராடஸ்டண்டு சமயத்திற்கு ஆதரவளித்தாலும், அரசியல் காரணங்களுக்காக அதுவும் ஒடுக்கப்பட்டது.

இச்சூழ்நிலையில் பிரான்சில் கால்வீனியம் பரவத் தொடங்கியது. மன்னரின் ஆதிக்கத்தைக் குறைக்கவும் திருச்சபையின் செல்வத்தைப் பறிக்கவும் பிரபுக்களும் கால்வீனிய இயக்கத்தில் சேர்ந்தனர். பிரான்சின் அரசராக ஆன இரண்டாம் ஹென்றி (1547-1559), பிராடஸ்டண்டு சமயத்தை ஒடுக்க, ஹியூகோனாக்களை தீயிட்டு கொளுத்தல், சமய பேதத்தை ஒடுக்கும் நீதிமன்றம் (Inquisition) நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளைச் செய்தார். எனினும் பிராடஸ்டண்டு சமயம் வேகமாக வளர்ந்தது.

## இங்கிலாந்தில் சமய சீர்திருத்த இயக்கம்

இங்கிலாந்தைப் பொறுத்தவரை சமயச் சீர்திருத்தம், குறிப்பாக, டியூடர் வம்சத்தைச் சேர்ந்த அரசர் எட்டாம் ஹென்றி (1509-47) யின் ஏற்பாட்டிலேயே நடைபெற்றது. மார்டின் லூதரை கடுமையாக எதிர்த்து அவரது கருத்துக்களை மறுத்து ஒரு நூலை எட்டாம் ஹென்றி வெளியிட்டார். இதனால் அவருக்கு நம்பிக்கையின் காவலர் (Defender of Faith) என்ற பட்டத்தை போப் வழங்கினார். ஆனால் ஆரகானைச் சேர்ந்த தன் மனைவி காதரினை மணவிலக்கு செய்து ஆன்போலின்-ஐ மணக்க ஹென்றிக்கு அனுமதி வழங்க போப் மறுக்கவே, போப்புடனான தன் உறவை ஹென்றி துண்டித்துக் கொண்டார். மேலும், 1534-ல் பாராளு மன்றத்தைக் கூட்டி உயராண்மைச் சட்டம் (Act of Supremacy)-ஐ ஹென்றி நிறைவேற்றினார். அச்சட்டம், இங்கிலாந்து திருச்சபைக்கு தலைமை அதிகாரி ஆகும் வாய்ப்பை ஹென்றிக்கு கொடுத்தது.

ஆறாம் எட்வர்ட் (1547-53) ஆட்சியில் ஏற்பட்ட மாற்றங்களால், இங்கிலாந்து திருச்சபையில் பிராடஸ்டண்டு சமயத்தின் சாயல் படர்ந்தது. அரசி மேரியின் ஆட்சி (1553-58)யில் இங்கிலாந்தில் கத்தோலிக்கம் மீண்டும் தழைத்தது. பிராடஸ்டண்டு சமயத்தினர் (தாமஸ் கிரேன்மர் உட்பட) பலரை, மேரி துன்புறுத்தியதால் அவரை ரத்த வேட்கை மேரி (Bloody Mary) என்றழைத்தனர்.

முதலாம் எலிசபெத் (1558-1603) காலத்தில் ஆங்கிலிக்கானியக் (Anglican) கோட்பாடு, இங்கிலாந்தில் புகுத்தப்பட்டது. இங்கிலாந்தில் பிராடஸ்டண்டு சமயம் புகுத்தப்பட்டாலும், பிரிட்டனின் பகுதியான அயர்லாந்து தொடர்ந்து கத்தோலிக்கத்தையே பின்பற்றியது.

## சமய சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்

1. சமயச் சீர்திருத்த இயக்கத்தால் கிறித்தவம் இரண்டாகப் பிளந்தது. பிராடஸ்டண்டுகள், கத்தோலிக்கர் என கிறித்தவர் பிரிந்தனர்.

2. ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலிய ஆகிய நாடுகளில் மன்னர்கள் கத்தோலிக்கத்தை ஆதரித்தனர். பிராடஸ்டண்டு களை கொடுமைப்படுத்தினர். இதனால் மத சகிப்புத் தன்மை குலைந்தது.

3. இதன் மூலம் சமயப் போர்கள் ஏற்பட்டன.

4. விவிலியத்தை விளக்க பிராடஸ்டண்டுகள் முயன்றதால், மக்கள் சிந்திக்கும் ஆற்றல் பெற்றனர். இதனால் கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவற்றில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

5. திருச்சபையின் நிர்வாகம் ஜனநாயக முறையில் செயல்பட வேண்டும் என்ற கருத்து பிரிட்டனில் பரவியதால், மன்னர் பாராளுமன்றம் இடையே சச்சரவு ஏற்பட்டது. அதன் முடிவில் பாராளுமன்றம் வெற்றி பெற்றது.

6. பல புதிய திருச்சபைகள் தோன்றி, ஐரோப்பிய நாடுகளின் அரசியலிலும் மதத்துறையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

7. உருவான பல தேசிய அரசுகள், போப்பின் தலையீடு இன்றி சுதந்திரமாகச் செயல்பட்டன.

8. திருச்சபையின் சொத்துக்களை பிராடஸ்டண்டு நாடுகள் பறிமுதல் செய்தன. இதனால் அந்நாடுகளின் பொருளாதாரம் வளர்ந்தது.

9. திருச்சபையிலிருந்த குறைகளை நீக்க கத்தோலிக்கரும் பிராடஸ்டண்டுகளும் பாடுபட்டனர். இதனால் நல்ல ஐரோப்பிய சமுதாயம் உருவாயிற்று.

10. இரு மதத்தவரும் போட்டி போட்டுக்கொண்டு மக்களுக்கு கல்வி அளிக்க கல்விக் கூடங்களை நிறுவினர். பல கல்வி நிறுவனங்கள் ஏசு சபையால் நிறுவப்பட்டன.

## முடிவுரை

ஜெர்மனியில் உருவான சமய சீர்திருத்தம், கிறித்தவத்தை பிளவு படுத்தினாலும் திருச்சபைகளை சீராக்கியது. எளிய, சிறந்த வாழ்க்கை வாழ்ந்து மதத்தின் புனிதத் தன்மையைக் காக்க கிறித்தவ குருமார்கள் முன்வந்தனர். இதனால் கிறித்தவம் தழைத்து உலகெங்கும் பரவியது.

# 5. சமய சீர்திருத்த மறுப்பு இயக்கம்

கத்தோலிக்க திருச்சபையின் அமைப்பு சீர்கெட்டு, அழிவுப் பாதையை நோக்கி சென்று கொண்டிருந்தது. இதனால் பிராடஸ்டண்டு சமயமும் அதன் மூன்று முக்கிய பிரிவுகளும் விரைவாகப் பரவின. பிராடஸ்டண்டு சமயத்தைப் பின்பற்றிய ஐரோப்பிய நாடுகள், போப்பின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டன. இதனால் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு குறைந்தது. இந்நிலை நீடித்தால் விரைவில் ஐரோப்பாவிலிருந்து கத்தோலிக்கம் மறைந்து விடும் என போப்பும் திருச்சபையினரும் அச்சப்பட்டனர். எனவே, ஆரம்ப காலத் தூய்மையையும் புனிதத்துவத்தையும் கத்தோலிக்கத்தில் நிலை நாட்டுவதன் மூலம் கத்தோலிக்கத்திற்கு புத்துயிர் ஊட்டலாம் என அவர்கள் கருதினர். இதுவே சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கம் தோன்ற வழி வகுத்தது.

## சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கம் என்றால் என்ன?

பிராடஸ்டண்டு சமயத்தின் பரவலைத் தடுத்து நிறுத்த, மூன்றாம் பால், நான்காம் பால், நான்காம் பயஸ் ஆகிய போப்புகள் சிறப்புடன் பணியாற்றி கத்தோலிக்கத்தை

பொலிவுறச் செய்தனர். ரோம் நகர சமயக் குருமார்கள், தீடைன் சங்கம், காபுசின் சங்கம் ஆகியவற்றை ஏற்படுத்தி கத்தோலிக்கத்தை எழிலுறச் செய்தனர். இவ்வாறு, கத்தோலிக்கத்தை சீர்திருத்தி, புத்துயிர் அளிக்க உருவான இயக்கமே சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கம் எனப்படுகிறது.

## சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கம் - செயல்பாடு

டிரென்ட் கவுன்சில், இன்டெக்ஸ், ஏசு சங்கம், இன்குசிஷன் ஆகியவற்றின் மூலம் சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கம் செயல்படுத்தப்பட்டது.

### டிரென்ட் கவுன்சில் (கிபி. 1545)

பிராடஸ்டண்டு சமயம் தோன்றியவுடன், 1542-ல் வட இத்தாலியில் உள்ள டிரன்ட் நகரில், ஒரு பொதுச் சபையைக் கூட்டி, சமரசம் ஏற்படுத்த செய்யப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. பின்னர், 1545-ல் போப் மூன்றாம் பால்-ன் முயற்சியால் டிரென்ட்-ல் மற்றுமொரு கூட்டம் கூட்டப்பட்டது. இதுவே டிரென்ட் கவுன்சில் (Trent Council) எனப்பட்டது. பல இடங்களில் தொடர்ந்து நடைபெற்ற இக்கவுன்சில், 1563-ல் முடிவுற்றது. அதில் நிறைவேறிய தீர்மானங்கள்:

1. பிஷப்புகளும் பாதிரிகளும் சமயப் பணிகளில் முழுக்கவனம் செலுத்தல்.
2. ஊழலற்ற புனித வாழ்க்கையை குருமார்கள் மேற்கொள்ளல்.
3. சமயப் பணிகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பதை தெளிவுபடுத்த சமயப் பள்ளிகள் தொடங்கல்.
4. பாவ மன்னிப்புச் சீட்டு விற்பனையை தடை செய்தல்.
5. தாமஸ் அக்வினாஸ் போன்றோரின் கத்தோலிக்க சமயக் கருத்துக்களை மீண்டும் வலியுறுத்தல்.
6. தெய்வ நம்பிக்கை வழியே வீடு பேற்றை அடையமுடியும்; அந்நம்பிக்கையை 'மக்களிடையே அதிகரிக்க முயற்சி செய்தல்.

### இன்டெக்ஸ் (கிபி. 1564)

இன்டெக்ஸ் (Index) என்ற தலைப்பில், தடை செய்யப்பட்ட நூல்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதில் முதலில் சமயத் துரோகிகளின் பட்டியலும், இரண்டாவதில் தடை செய்யப்பட்ட நூல்களின் பட்டியலும், மூன்றாவதில் தடை செய்யப்பட்ட நூல்களில் உள்ள ஆட்சேபத்திற்குரிய பகுதிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. இத்தடைகள் இத்தாலியில் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டன. ஆனால் பல ஐரோப்பிய கத்தோலிக்க நாடுகள் அவற்றை நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டன.

### ஏசு சங்கம் (கிபி. 1534)

பாரிஸ் பல்கலைக்கழக மாணவர்களில் சிலர், இக்னேஷியஸ் லயோலா (Ignatius Loyola)வின் ஏற்பாட்டின்படி, 1534-ல் ஏசு சங்கத்தை (Society of Jesus) நிறுவினர். சங்கத்தின் தலைமையகம் ரோமில் நிறுவப்பட்டது. சங்கத்தின் தலைவரான இக்னேஷியஸ் லயோலா (1481-1536), தளபதி என்றழைக்கப்பட்டார் சங்கத்தின் உறுப்பினர்கள், ஜெஸ்யூட்டுகள் (Jesuits) எனப்பட்டனர். 1540-ல் ஒரு ஆணையின்மூலம் ஏசு சபையை போப் மூன்றாம் பால் அங்கீகரித்தார்.

"வறுமை, துறவு, பணிவு" என்ற கோட்பாடுகளுடன் "போப்பிற்கு அடிபணிந்து நடத்தல்" என்ற கொள்கையுடன் ஏசு சங்கம் செயல்பட்டது. அவற்றில் பயிற்சி அளிக்க தனி கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

ஜெர்மனி, பிரான்ஸ், போலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சிறப்பாகப் பணியாற்றியதன் மூலம் கத்தோலிக்கத்தைப் பரப்பி, பிராடஸ்டண்டுகளை ஏசு சங்கத்தினர் தளர்ச்சியடையச் செய்தனர். லயோலாவின் சீடர்களுள் ஒருவரான ஃபிரான்சிஸ் சேவியர், சீனா, இந்தியா, ஜப்பான், கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளுக்குச் சென்று கத்தோலிக்கத்தை வளர்க்கப் பாடுபட்டார். ஏசு சங்கத்தின் முயற்சியால் கத்தோலிக்கம் மீண்டும் தழைக்கத் தொடங்கியது.

## இன்குசிஷன் (கிபி. 1208, 1478, 1542)

கத்தோலிக்க சமயத் துரோகிகளைத் தண்டிக்க, இன்குசிஷன் (Inquisition) என்ற சமய ஒறுப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இதை முதலில் 1208-ல் போப் மூன்றாம் இன்னசென்ட் நிறுவினார். பின்னர் 1478-ல் காஸ்டில் அரசில் ஒரு ஆணை பிறப்பித்து, இந்த மன்றத்தை போப் நான்காம் சிக்ஸ்டஸ் ஏற்படுத்தினார். இம்மன்றத்திற்கு, குற்றங்களை விசாரித்து தண்டனை வழங்கும் அதிகாரத்தை, 1542-ல், போப் மூன்றாம் பால் வழங்கினார். போப்பின் மன்ற உறுப்பினர்களில் (Cardinals) ஆறு பேரை நீதிபதிகளாகக் கொண்டு இம்மன்றம் செயல்பட்டது. உண்மையில் பிராடஸ்டண்டுகளை ஒடுக்கவே இம்மன்றம் அமைக்கப்பட்டது.

இன்குசிஷன் மூலம், திருச்சபையின் அதிகாரம் உறுதி செய்யப்பட்டது; எல்லா அதிகாரங்களும் போப்பிடம் தரப்பட்டன; போப்புகளின் ஆடம்பர வாழ்க்கை நீக்கப்பட்டது; கத்தோலிக்கத்தின் கோட்பாடுகள் தெளிவாக விளக்கி வெளியிடப்பட்டன; கத்தோலிக்க துரோகிகளுக்கு கடுமையான தண்டனைகள் தரப்பட்டன; பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்டன.

ஸ்பெயினில், ஃபெர்டினான்ட் - இசபெல்லா காலத்தில் இன்குசிஷன் அமைக்கப்பட்டது. இன்குசிஷனைப் பயன்படுத்தி, சமயத் துரோகிகளை ஸ்பெயின் மன்னர் இரண்டாம் பிலிப்பும், பிரான்சில் ஹியூகோனாக்களை கைஸ் பிரபுக்களும் அடக்கினர். இன்குசிஷன் மன்றம் ஏற்படுத்திய அச்சத்தால், பல நாடுகளில் கத்தோலிக்கம் தழைக்கத் தொடங்கியது.

## சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கத்தின் விளைவுகள்

* சமய சீர்திருத்த எதிர்ப்பியக்கத்தின் முயற்சியால் கத்தோலிக்கம் மீண்டும் தழைத்தது; பிராடஸ்டண்டிசத்தின் வளர்ச்சி குறைந்தது.

* திருச்சபையில் இருந்த பல குறைகள் நீங்கின. எளிய, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து மக்களுக்கு முன்னுதாரணமாக கத்தோலிக்க குருமார்கள் வாழ்ந்தனர். இதனால் கத்தோலிக்கத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

* பல கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், சமூக சேவை இல்லங்கள் ஆகியவற்றை ஜெஸ்யூட்டுகள் நடத்தினர். இதனால் பாமர மக்களிடையே கத்தோலிக்கம் வேரூன்றியது.

* கத்தோலிக்கத்தின் கோட்பாடுகள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் விளக்கப்பட்டன. பிற்காலத்தில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சி இயக்கத்திற்கும் இவ்வியக்கம் தூண்டுகோலாய் அமைந்தது.

## இவை தவிர தீய விளைவுகளாக,

1. இரண்டாகப் பிரிந்த கிறித்தவத்தில் பின்னர் சுவிங்லியம், கால்வீனியம் என பல பிரிவுகள் ஏற்பட வழி பிறந்தது.

2. இப்பிரிவினரிடையே ஒற்றுமையின்றி சமயத்தின் பெயரால் சண்டைகள், கலகங்கள், துன்புறுத்தல்கள் தொடர்ந்தன.

3. இவை பின்னர் ஐரோப்பிய நாடுகளிடையே சமயப் போர்களாக உருவெடுத்தன.